உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்துநான்காந்தொகுதி.

Volume 44.

விய—சருவசித்து ௵

1946—1947

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

சச-ஆம் தொகுதியின் உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக் குறிப்புக்கள்:—	ஸ்ரீ. உப. வே. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியஸ்வாமி ...	கசக
	,, திவான்பஹதூர் V பாஷ்யமையங்கார் ஸ்வாமி ...	கசஉ
	,, மஹாமஹோபாத்யாய பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் ...	கசஉ
	,, ச. சோமசுந்தரபாரதியாரவர்கள் ...	கசரு
	,, ராவ்ஸாஹிப். S வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. ...	கசரு
	,, வே. வ. இராமசாமி அவர்கள் ...	கசச
	,, சி. கணேசையரவர்கள் ...	கசச
ஆசிரியர்பிரிவு:—	உதவிப்பத்திராசிரியர் ...	கருரு
ஆராய்ச்சியின் முக்கியத்தன்மை:—	ஸ்ரீ. பேராசிரியர் ஜே. பி. மாணிக்கம் அவர்கள் M.A., L.T. ...	கூ
இந்திய தேசீயக் கொடிவாழ்த்து:—	உதவிப்பத்திராசிரியர். ...	கஉகூ

இரங்கற் பாக்கள்:-

T. K. இராமாநுஜையங்கார் கசரு
ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் கசகூ
,, K. சிவஞானம்பிள்ளையவர்கள் கருங
,, இ. சே. வரதராஜையரவர்கள் கருரு
,, A. பூவராகபிள்ளையவர்கள் கருஎ
,, பு. சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள் கருஅ
,, பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன்செட்டியாரவர்கள். கருகூ
,, பண்டித. நா. கனகராஜையரவர்கள் கசு0
,, ,, சித. நாராயணசாமியாரவர்கள் கசுஉ
,, ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள் கசுங
,, வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள் கசுச
,, ,, சிரோமணி. V. N. ஸ்ரீராமதேசிகாசாரியரவர்கள். கசுசு
,, ,, S. ஆழ்வாரையங்காரவர்கள் கஎ0
,, வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A., L.T. கஎஉ
,, திரு. கோ. அப்பனையங்காரவர்கள் கஎங
,, சி. கணேசையரவர்கள் கஎச
,, வித்வான். ரெ. இராமையங்காரவர்கள் கஎச
,, ,, E. G. நாராயணையங்காரவர்கள் கஎசு

இல்லறக்கிழத்தி மாண்புகள்:— ஸ்ரீ. சி. கணேசையரவர்கள் அஉ

இலக்கிய இன்பம்:- ஸ்ரீ. பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A. (Hons.) B.O.L. கஅக

கச்சிக்கலம்பக அரங்கேற்றவைபவம் ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் சகூ

கோல்லம் ஆண்டு:— ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் ஙங

சுதந்திரதினவிழாநிகழ்ச்சி:— பத்திராசிரியர் கஉரு

சுவாமி விபுலாநந்தர் மறைவு:—	பத்திராசிரியர்	கஎஅ
	ஸ்ரீ. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	கஎகூ
செந்தமிழ்:—	ஸ்ரீ. சி. கணேசையரவர்கள்	ருரு
சோலைமலைக் குறவஞ்சி:—	ஸ்ரீ. அலங்காரதேவராஜன் அவர்கள்	க0க
தமிழ்நாட்டுமக்களின் சில ஒழுக்கமரபுகள்:—	ஸ்ரீ. சி. கணேசையரவர்கள்	க
தமிழ்வசனநடை:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	சுரு
திருக்கருவை வெண்பா வந்தாதி:—	ஸ்ரீ. பண்டித. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்	கஎ
திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்:—	ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள்	ககஎ
திருப்பதிக்கோவை:—	ஸ்ரீ. வித்வான் ரெ. இராமையங்காரவர்கள்	ருகூ
திருவெங்கைக்கோவை:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	ககஉ
தொல்காப்பியத்திற்கண்ட தமிழர்சமயம்:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	எகூ
நன்பு:—	ஸ்ரீ. R. அரங்கராஜன் B.A. அவர்கள்	நகூ
நன்மையும் தீமையும்:-	ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.	கஅகூ
பண்டைமக்களின் பொது இருப்பிடம்:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.	ரு, சுஅ
பத்திராசிரியர்குறிப்பு:—		எக
பன்னிருதிங்கட்பெயரும் வந்த பாட்டு:—	ஸ்ரீ. வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள்.	கரு
பாரத சுதந்திரத்திருநாட் பாட்டு:-	ஸ்ரீ. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள்	கநக
பாரத சுதந்திரதினவிழா வாழ்த்துப்பாக்கள்:—	ஷை	கநஉ
பூண்டி அரங்கநாதமுதலியார் தனிக்கவிகள்:—	ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்	உந

மதிப்புரை:— எஉ, கஉங, கஅ0, கசுங

மதுரைத்தமிழ்ச்சங்கநிருவாகஸபைத்தீர்மானங்கள்:— கக0

மரம்படுதீங்கனி:—ஸ்ரீ. பண்டித S. அருளம்பலம் அவர்கள் உசு

மஹாவித்வான் மறைவு:— ஸ்ரீ. ப. ரெ. திருமலைஐயங்காரவர்கள் கஎஎ

மௌரியர் தென்னிந்தியப் படையெடுப்பு:— ஸ்ரீ. ராவ்ஸாஹிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. அகூ

வச்சத்தொள்ளாயிரத்தில் மிச்சம்:— ஸ்ரீ. பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O.L., சங

வள்ளுவர்வாய்மொழி:— ஷை ஷை எங, க0ரு

அநுபந்தம்.

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி-கூல் பக்கம் 1—10.)

நூல்கள்.

முற்றுப்பெறாதவை.

குருகைமான்மியத்து மாறன்திருவவதாரச் சருக்கம்:— பத்திராசிரியர் (பகுதி ச, ரு,ல் பக். ருஎசு-ல்1–8)

பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் :— ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் (பகுதி 1–8)

செந்தமிழ் ௪௪-ஆம் தொகுதிக்குப் பொருளுரை வழங்கியோர்பெயரும் பொருளுரைகளின் பெயரும் பக்கமும்

ஸ்ரீ. உப. வே. வித்வான் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்காராசாரியர் ஸ்வாமி, காஞ்சீபுரம்.

அநுதாபக்குறிப்பு க௪க

திரு. கோ. அப்பனையங்காரவர்கள், எதிர்க்கோட்டை.

இரங்கற்பாக்கள் ... ... கஎரு

திரு. பெ. நா. அப்புஸ்வாமிஐயரவர்கள், B.A., B.L. மயிலாப்பூர்.

நன்மையும் தீமையும் க௮௬

திரு. R. அரங்கராஜையங்காரவர்கள் B.A. டில்லி.

நன்பு ... ... ரு௬

திரு. S. அருளம்பலம் அவர்கள், காலி, கொழும்பு.

மரம்படுதீங்கனி உ௯

திரு. அலங்காரதேவராஜையங்காரவர்கள், கருப்பட்டி, மதுரைஜில்லா

சோலைமலைக்குறவஞ்சி க0க

திரு. வித்வான். S. ஆழ்வாரையங்காரவர்கள், மதுரை.

இரங்கற்பாக்கள் கஎ0

திரு. பண்டிதர். கா. போ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O.L. கொழும்பு.

இலக்கிய இன்பம் க௮க

வச்சத்தொள்ளாயிரத்தில் மிச்சம் ... ௪ரு

வள்ளுவர்வாய்மொழி ... எரு, க0௫

திரு. வே. வ. இராமசாமி அவர்கள், தமிழ்த்தென்றலாசிரியர், விருதுநகர்

அநுதாபக்குறிப்பு க௪௪

திரு. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள், பதுமநாபபுரம், தக்கலே P. O.

திருக்கருவைவெண்பாவந்தாதி ... ... கஎ

திரு. பாலகவி. வயிநாகரம். வே. இராமநாதன்செட்டியாரவர்கள், தேவகோட்டை.

இரங்கற்பாக்கள் ... ... கருகூ

திரு. கி. இராமாநுஜையங்காரவர்கள், மதுரை.

ஆசிரியர்பிரிவு ... ... கநந

இந்தியதேசீயக்கொடிவாழ்த்து ... ... கஉகூ

இரங்கற்பாக்கள் ... ... கசரு

சுதந்திரதினவிழா நிகழ்ச்சி ... ... கஉரு

விபுலாந்தர்மறைவு ... ... கஎஅ

திரு. வித்வான் ரா. இராமாநுஜையங்காரவர்கள், இராமநாதபுரம்

இரங்கற்பாக்கள் ... ... கசுச

பன்னிருதிங்கட்பெயரும்வந்தபாட்டு ... கரு

திரு. வித்வான். ரே. இராமையங்காரவர்கள், மதுரை.

இரங்கற்பாக்கள் ... ... கஎச

திருப்பதிக்கோவை ... ... ருகூ

திரு. சி. கணேசையரவர்கள், யாழ்ப்பாணம்.

அநுதாபக்குறிப்பு ... ... கசச

இரங்கற்பாக்கள் ... ... கஎச

இல்லறக்கிழத்திமாண்புகள் ... ... அஉ

செந்தமிழ் ... ... ருந

தமிழ்நாட்டுமக்களின் சில ஒழுக்கமரபுகள் ... க

திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

அநுதாபக்குறிப்பு ... ... கசஉ

சுவாமி விபுலாநந்தர் மறைவு ... ... கஎகூ

திரு. பண்டிதர். நா. கனகராஜையரவர்கள், புதுக்கோட்டை.
இரங்கற்பாக்கள் ... ... கசு௦

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், ஆசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம்.
கொல்லம் ஆண்டு ௬௬

திரு. K. சிவஞானம்பிள்ளையவர்கள், மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர்.
இரங்கற்பாக்கள் க௫௬

திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.
திருக்கோளிலிக்கல்வெட்டுக்கள் ... ... கசள

திரு. ச. சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A. B.L பசுமலை.
அநுதாபக்குறிப்பு கஈ௬

திரு. சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், யாழ்ப்பாணம்.
பண்டைமக்களின் பொது இருப்பிடம் ... ௫, சுஅ

திரு. ப. ரே. திருமலைஐயங்காரவர்கள், திருவல்லிக்கேணி, சென்னை.
மஹாவித்வான் மறைவு ... ... களஎ

திரு. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், ஆசிரியர், மதுரைத்தமிழ்ச் சங்கக்கலாசாலை.
இரங்கற்பாக்கள் ... ... கஈசு

திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள், மாவிட்டபுரம், தெல்லிப் பழை, யாழ்ப்பாணம்.
பாரசுதந்திரத்திருநாட்பாட்டு க௬க
பாரதசுதந்திரதினவிழா வாழ்த்துப்பாக்கள். ... க௬௨

திரு. பண்டித. சித. நாராயணசாமியாரவர்கள், கல்லல்.
இரங்கற்பாக்கள் ... ... கசு௨

திரு. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள், இராமநாதபுரம்.
இரங்கற்பாக்கள் ... ... கசு௬

திரு. வித்வான். E. G. நாராயணையங்காரவர்கள், *மதுரை.*

இரங்கற்பாக்கள் ... ... கஎசு

திரு. திவான்பஹதூர் V. பாஷ்யமையங்காரவர்கள், *கீழ்ப்பாக்கம், சென்னை.*

அநுதாபக்குறிப்பு ... ... கசஉ

திரு. வித்வான். பு, சி. புன்னைவனநாதமுதலியாரவர்கள், *தருமபுரம்.*

இரங்கற்பாக்கள் ... ... கருஅ

திரு. வித்வான் A. பூவராகபிள்ளையவர்கள், *ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.*

இரங்கற்பாக்கள் ... ... கருஎ

திரு, பேராசிரியர் ஜே. பி. மாணிக்கம் அவர்கள் M.A. L.T. *சென்னை.*

ஆராய்ச்சியின் முக்கியத்தன்மை... ... சு

திரு. வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A. L.T. *அரங்கநாதபுரம்.*

இரங்கற்பாக்கள் ... ... கஎஉ

திரு. இ. சே. வரதராஜையரவர்கள், *ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.*

இரங்கற்பாக்கள் ... ... கருரு

திரு. ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A. B.L. *சென்னை.*

அநுதாபக்குறிப்பு ... ... கசகூ

மௌரியர் தென்னிந்தியப்படையெடுப்பு ... அசு

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், *மயிலாப்பூர், சென்னை.*

கச்சிக்கலம்பக அரங்கேற்றவைபவம் ... சசு

தமிழ்வசனநடை ... ... சுரு

திருவெங்கைக்கோவை ... ... ககஉ

தொல்காப்பியத்திற்கண்ட தமிழர்சமயம் ... எசு

பூண்டி அரங்கநாதமுதலியார் தனிக்கவிகள் ... உகூ

திரு. வித்துவான். சிரோமணி. V. N. ஸ்ரீராமதேசிகாசாரியரவர்கள், *வத்தலக்குண்டு.*

இரங்கற்பாக்கள் ... ... கசுசு

3556

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சுச.] விய-ஞூ கார்த்திகை—மார்கழி-மீ [பகுதி—க, உ.
Vol. 44. November '46—January-1947. No. 1, 2.

தமிழ்நாட்டுமக்களின் சிலஒழுக்கமரபுகள்

க. பெதும்பைப்பருவமுற்ற தம் புதல்வியரைப் பெற்றோர் தமதில்லுள் அடக்கிவைத்தல்.

அஃது இற்செறித்தல் எனவும்படும். இச்செயல் முன்னாட் டொடங்கித் தமிழ்நாட்டுமக்கள் கொண்டொழுகியதொரு சிறந்த ஒழுக்கமாகும். இவ்வொழுக்கம் மரபாக வந்ததென்பது, பழந் தமிழ்நூலாகிய அகநானூற்றுள் வருஞ் சில செய்யுட்களாற் புலப் படுகின்றது. அச்செய்யுட்களின் அடிகள்,

"முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
யலமர லாயமொடு யாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய
காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை
பேதை யல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென" (அகம். எ)

என்பனவும்,

"வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினும்"

என்னும் கஎ-ஆம் செய்யுளில்வரும்,

"நெடுமொழித் தந்தை யருங்கடி நீவி"

என்னும் அடியுமே.

இவற்றுள், முதற்செய்யுளின் பொருள்:—

ஆயத்தோடும் புறம்போந்து திரிகின்ற தன்மகளைச் செவிலி நோக்கி, "அறிவுடைய இளமகளே! நினக்கு முலைகள் அரும்பின;

*

பற்கள் விழுந்து முளைத்து விளங்கின; தலைமயிர் முடித்தலமைந் தன; தண்ணிய தழையை உடையாகவுடையை (புடைவைகட்டும் பருவமாயினை என்றபடி); யாண்டுஞ் சுழன்று திரியும் ஆயத்தா ரோடும் நீ எவ்விடத்தும் போகாதே; பழமையையுடைய நம்பதி வருத்துந் தெய்வமுடையன; இவற்றானே நீ காவல்பூண்டாய்; இனி நீ வாயிலிடத்தும்போகாதே; பேதைப்பருவமுடையையல்லை (அதற்கு மேற்பட்ட பருவமுடையையாயினை என்றபடி); பெதும் பைப்பருவத்தே (புறம்போகாத பருவத்தே) புறம்போயினை என்றுகூற" என்பது.

இரண்டாஞ்செய்யுளடியின் பொருள்,

'புகழமைந்த தந்தையின் கடத்தற்கரிய காவலைக் கடந்து' என்பது.

நெடுமொழி - வஞ்சினமுமாம்.

இவ்விரண்டு செய்யுட்களினும் பயின்ற அடிகளின் கருத்தினானே, அக்காலத்திலே, பெதும்பைப்பருவமுற்ற தம் புதல்வியரைப் பெற்றார் புறம்போகாமல் தமதில்லுளடக்கிவைத்த முறை அறியப் படுதல் காண்க. பெதும்பைப்பருவம், ஒரு ஆண்மகனைக் காதலித் துச் சேறற்குரிய பருவமென்பதனைப் "பேதைப்பருவம் பின் சென்றது" என்னும் திருக்கோவையார்ச் செய்யுளானும் (௨௨௧) அறிக. பெதும்பைப்பருவம் பதினொருவயதுதொடங்கிப் பன் னிரண்டுவயதுமுடியும்வரையுமுள்ள பருவம்.

௨. தம் நாயகரல்லாத ஆடவர்களோடு மகளிர் எதிர்நின்று பேசாமையும், அவ்வாறே ஆடவர்களும் தம் மனைவிய ரல்லாத மகளிரோடு எதிர்நின்று பேசாமையும்.

இவ்வொழுக்கம் மரபாக வழங்கிவந்ததென்பது, பதினெண் கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்றாகிய திணைமாலைநூற்றைம்பது என் னும் நூலுள் வரும்,

"நண்ணிநீர் சென்மி னமரவ ராயவேல்
எண்ணிய வெண்ண மெளிதரோ—எண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத் தான்" (பாலை, ௨௭)

என்னும் செய்யுளான் அறியப்படும். இச்செய்யுட்கண், களவிற் புணர்ந்து உடன்போயினளாகிய தன் மகளும் அவளுடைய காதலனுமாகிய இருவரையும் தேடிச்சென்ற செவிலி, அவர்களைப் போற் களவிற்புணர்ந்து உடன்வருவாரிருவரைக் கண்டு, நும்போல இவ்வொழுக்கினராய் உடன்போயினாரிருவரைக் கண்டீரோ என்று வினவியவிடத்துப் புணர்ந்துடன்வருவாராகிய அவருள் தலைவன் செவிலியைநோக்கி, ஞாயிறுபோல்வானை யான்கண்டேன், திங்களை யொத்தாளை இவளைக் கேட்டறிவீராக என்று கூறினான்: என வரும் பொருளை நோக்குமிடத்து மேற்கூறிய ஒழுக்கம் பெறப்படு தல் காண்க.

இவ்வாறே மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருக் கோவையாருள் வரும்,

"மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயின ரேபுலி யூரெனைநின்
றாண்டா னருவரை யாளியன் னானைக்கண் டேனயலே
தூண்டா விளக்கனை யாயென்னை யோவன்னை சொல்லியதே"

என்னுஞ் செய்யுளுள்ளும், களவிற்புணர்ந்து உடன்வருவாரிருவ ரைக்கண்டு அவரைநோக்கி நும்போல இவ்வொழுக்கம் பூண்டவ ராய் முன்னே இருவரைப் போகக்கண்டீரோ என்று வினவிய செவிலிக்கு அவருள் தலைவன் அச்செவிலியை நோக்கி, 'ஆளியன் னானை யான்கண்டேன்' என்று கூறிவிட்டுப் பின் தன்னயல்வந்த தலைவியை நோக்கித் 'தூண்டாவிளக்கனையாய்! அவனயல்வந்த அன்னைசொல்லியது யாது? அதனை அவட்குச் சொல்லுவாயாக' என்று கூறினான் என வரும் பொருளானும் அவ்வொழுக்கம் பெறப் படுதலன்றியும், அந்நாளில் ஆடவர் பிறர்மனைவியரைத் தாய்மாராக மதித்து ஒழுகிய ஒழுக்கமும், "என்னையோவன்னைசொல்லியதே" என அவன் வினவியபோது 'அன்னை' எனக் கூறியதனாற் பெறப் படுதலும் காண்க.

௩. பெண்மகளொருத்தி ஆண்மகனெருவனைக் காதலித்துக் களவிற் கூடியொழுகியபின், அவனையன்றிப் பிறனெருவனை மணவாமை.

இவ்வொழுக்கமும் மரபாகவந்ததென்பது, மிகப் பழமையான தொல்காப்பியமென்னும் இலக்கணநூலுள், "உயிர்செல, வேற்று வரைவு வரினது மாற்றுதற்கண்ணும்" தலைவி கூற்றுநிகழ்த்துவாள் எனக் கூறப்படுதலினாலும், குறுந்தொகை என்னும் பழைய சங்க இலக்கியத்துள் வரும்,

"பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சார
லிருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவோ னென்று
மன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவில் வழுங்க லூரே"

என்னுஞ் செய்யுட்கண், 'எனக்குரியனாகிய தலைவன் என்றும் யாம் இருவரும் எதிர்ப்பட்டுக்கண்ட அற்றைநாளிற் போன்ற நண்பினனா யொழுகவும், அதனையறியாமையான் இவ்வூர் என் மணங்குறித்து வந்த புதியவர்களையுடையதாயிராகின்றது' என்று தோழிகேட்பக் கூறி, அவளை அம் மணத்தை விலக்குமாறு குறிப்பிப்பதாகவரும் பொருளானும் அறியப்படுதல் காண்க. (அம்ம - வியப்பின்கண் வந்த இடைச்சொல். அழுங்கல் - ஆரவாரம்.

இன்னும், ஐங்குறுநூறு என்னும் பழைய சங்கஇலக்கியத்துள் வரும்,

"அன்னை வாழிவெண் டன்னை புன்னை
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை யென்று மியாமே யிவ்வூர்
பிறிதென் றாகக் கூறு
மாங்கு மாக்குமோ வாழிய பாலே"

என்னுஞ் செய்யுட்கண்ணும், 'பூக்கெழுதுறைவனை எனதுதலைவனென்று யாம் உரிமைபாராட்டிக்கொண்டிருப்பேமாகவும், இவ்வூரார் பிறிதொருநிகழ்ச்சியாகக் கூறுநிற்பர். அங்ஙனமும் என் ஊழ் ஆக்கிவிடுமோ?' எனப் பிறன்வரைவையஞ்சித் தலைவி தோழி கேட்பக் கூறி, அவளை அவ் வரைவை விலக்குமாறு குறிப்பிப்பதாக வரும் பொருளானும் அவ்வொழுக்கம் பெறுப்படுதல் காண்க. பிறிதொன்று என்றது வேற்றுவரைவை. (இது தலைவிகூற்றென்பது நச்சினார்க்கினியர் கருத்து. ஐங்குறுநூற்றுரைகாரர் தோழி கூற்றென்பர்).

இன்னும் தம் நாயகர் பொருளீட்டன்முதலியவைகாரணமாக வேற்றூர் சென்றிருந்தவழித் தம்மைக் கோலஞ்செய்துகொள்ளாமை முதலியனவும் தமிழ்நாட்டுமக்களின் இயற்கையான ஒழுக்கமாகும். இவ்வொழுக்கங்களையெல்லாம் இப்பொழுது நம் தமிழ்நாட்டுமக்கள் கைவிட்டு, ஆங்கில நாகரிகத்தையே மேற்கொண்டு ஒழுகத் தலைப்பட்டுள்ளார்கள். அவ்வாறொழுகுவது நம் தமிழ்நாட்டுக்கு இழிவுதலைத்தருவதாகும். இதனை அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

சி. கணேசையர்.

பண்டைமக்களின் பொது இருப்பிடம்

[சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.]

சா௩-ஆம் தொகுதியின் ௨௩அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

செம்பு எனும் உலோகம்.

ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் முதன்முதல் அறியப்பட்ட உலோகம் செம்பேயாம் என்பது எல்லாப் பழம்பொருளாராய்ச்சியாளருக்கும் ஒப்ப முடிந்த துணிபு. இந்த உலோகம் பல இடங்களிலே கலப்பில்லாமல் இலங்கிக்கொண்டிருந்தமையால் மக்களுக்கு நேரிற் கிடைப்பதாயிற்று. இதன் சிவந்தநிறத்தின்நிமித்தமே இதற்குச் செம்பு என்ற பெயர் வழங்குகின்றது.

ஆயின் பழந்தமிழில் இது எருவை எனவும் கெப்பு அல்லது கெம்பு எனவும் பெயரடைந்திருக்கவேண்டியது. எருவை எரி (- நெருப்பு) நிறம் உள்ளது. எரி கன்னடத்தில் உரி என நிற்பது. எரி உரி எனும் சொற்களுக்கு எல் என்பதே அடி. இவ்வடியினின்றுதான் ககரமாகிய வலியுறுத்தும் முதனிலை மெய் சேர்ந்து கேழ் எனும் சொல் பிறந்து, அதிலிருந்து கேப்பு எனவும் கெம்பு எனவும் செம்பு எனவும் திரிதலுற்றது. இவற்றின் விரிவை எமது சொற்பிறப்பு ஒப்பியற்றமிழகராதியினுட் கண்டுகொள்க.

இனி, செம்பினுக்கு இருந்த எருவை எனும் பழந்தமிழ்ப்பெயர் சுமேரியத்தில் உருது (urudu) எனக் காண்கின்றோம். அப்பாஷையில் இது மிகப் பழஞ்சொல் என்ப. அதற்குப் பிற்பட்ட அக்கத்தியமொழியிலே செம்புக்கு எரு (eru) என்று பெயர். பஸ்கு எனும் ஐரோப்பிய புராதனபாஷை செம்பை உறையித (uraida) என்கின்றது. லத்தீனில் அது றவுதுஸ் (raudus). இவையெல்லாம் எரி, உரி எனும் நெருப்புப்பெயரிலிருந்து எழுந்து தமிழ் எருவையோடு ஒத்தனவாய்நிற்பனவே. ஸம்ஸ்கிருத லோகம் (loha-ruc) எனும் சொல்லும் அவ்வாறே நெருப்புப்பெயரிலிருந்து உண்டாகி ஆதியிற் செம்பையே குறித்துப் பின் இரும்பாதியனவுக்கும் பொதுப்பெயராயிற்று.

அப்பால், செம்புப்பெயர் சுமேர் அக்கத்தியருக்குள்ளே சபர் அல்லது கபர் (zabar) என அறியப்பட்டுள்ளது. இதை அசீரியர் சிபறு (siparru) என்றும், பிற்காலம் அராபியர் சிவ்ற் (zift) என்றும் வழங்கினர். செம்பு — சபர் — சிபறு — சிவ்ற் எனும் பெயர்டுகள் கிரேக்கத்தில் குப்றொஸ் (kypros), லத்தீனில் குப்றும் (cuprum), ஆங்கில சாக்சனியத்தில் கொபொர் (copor), இங்கிலீஷில் கொப்பர் (copper) ஆதியனவாகநின்று பழக்குலங்களெல்லாம் ஒருநாள் ஒருங்கே வதிந்து தாம் முதன்முதல் அறிந்த லோகத்தை ஒரே பெயரால் வழங்கியமைக்கு நல்ல எடுத்துக்காட்டாகின்றது.

எறிபடை ஆதியன.

பண்டைமக்கள் மிருகாதிகளைத் தாக்குதற்கு அம்பும் வில்லுமே பெரும்பாலும் உபயோகித்தனர். அம்புக்குத் தமிழிற் பழைய பெயர் எய் என்பதாகும். தமிழின் பாகதங்களாகிய கன்னடத்தில் அது எய், எய்ய என்றும், துளுவத்தில் எசி என்றும், தெலுங்கில் ஏடு என்றும் திரிந்துநிற்கும். கன்னடத்தில் ஏது என்பது அம்புபோன்ற முட்களைச் சிலிர்க்கின்ற முள்ளம் பன்றியின் பெயர். தமிழில் எய் எனுஞ்சொல் முட்பன்றியையும் குறிக்கும். எய்ப்பன்றி என்பது இருபெயரடுக்கு. இனி, எய் எனும் அம்புப்பெயர்

கிரேக்கத்தில் இயொஸ் (ios), ஸம்ஸ்கிருதத்தில் இஷுஸ் (ishus). முட்பன்றியின்பெயரும் சில பழையமொழிகளில் எய்யின் மரூஉவாகக் காணப்படுகின்றது. கிரேக்கம் எக்கினொஸ் (echinos), சர்மனியம் இகில் (igil), லிதுவானியம் எசிஸ் (ezys), ஆர்மெனியம் ஒசினி (ozni) ஆதியன.

வில்லின் கயிற்றுப்பெயரும் பல பாஷைகளில் ஒத்திருக்கின்றது. தமிழில் அது ஞாண், நாண் எனப்படும். இச்சொல் நீண்டது எனும் பொருளுள்ளது. இதுதான் ஸம்ஸ்க்ருதத்தில் ஜ்யா (jya) எனவும், கிரேக்கத்தில் பியொஸ் (bios) எனவும் திரியும். ஸம்ஸ்கிருத ஸ்நாவன் (snavan) சொல்லில் ஸகரம் தலைத்தோன்றலாய்வந்தது.

வில்லு எனும் பெயர் வளைந்தது எனும் பொருளது. வளை-தல் உள் எனும் அடியாற் பிறந்து, வங்கு + வாங்குதல், வனை-தல், வணர்-தல், வணங்கு-தல் எனவும் நிற்கும். ஆகவே ஆங்கில - சாக்சனியத்தில் "பொக" (boga) எனவும், இங்கிலீஷில் "போ" (bou) எனவும் வருவனவும் வில்லுப்பெயரும் ஒன்றே என நுனித்துக்காண்க. சுமேரியத்தில் பன் என்பது வண் என்பதன் மரூஉ. வளைந்தது வண் = பன். சுமேரிய பன் அல்லது வன்தான் ஸம்ஸ்கிருத தன் -வன் (dhan - van) எனும் வில்லுப்பெயரின் இரண்டாம் உறுப்பு என்ப. ஆயின் ஸம்ஸ்கிருத பாணஸ் அல்லது வாணஸ் (ban-as, van-as) உள்ளபடி வில்லையே முதலிற் கருதியபோதிலும், முன்னர் நாம் சுட்டிய பொருட்டிரிபால், அம்புக்குப் பெயராகிவிட்டது. இச்சொல்லும் தமிழ்ப் பாணமும் ஒன்றுபோலும். பணி - தல் தமிழிலே வளைதல் எனும் பொருளுள்ளது. பணிதலும் வணங்குதலும் ஒன்று. பணி, சுருண்டுகிடக்கும் பாம்புக்குப் பெயர். இதனை ஸம்ஸ்கிருதம் (phanin) என மாற்றிக்கொண்டது. பாணம் வில்லின்பெயராயிருக்கவேண்டியதாயினும், ஆகுபெயராய் அம்புக்கு ஆகிவிட்டது, வாளி எனும் சொல்லும் அப்படியே. அது தொடக்கத்தில் வில்லுக்கே பெயராயிருந்தது எனல்வேண்டும். இதற்கு எதிர்முறையாக, அம்புப்பெயர் வில்லுக்குவந்ததும் உண்டு. லத்தீனில் ஆர்க்குஸ் (arcus) எனும் சொல், இங்கிலீஷில் அரோ (arrow) எனுஞ் சொற்போல, அறுத்துச்செல்லும் அம்பைக்குறித்தது. பிற்காலத்தில் அதுதான் வில்லுக்குப் பெயராயிற்று. மறுபுறத்தில் கிரேக்கத்தில் வெலொஸ் (belos) என வில்லைக்குறித்த சொல்லும், பிராஞ்சியத்தில் வ்ளெச் (fleche) முதலான அதன் திரிபு - உருவங்களும் இன்றைக்கு அம்பைக் குறிக்கின்றன.

மனிதன் அறிந்த முதல் உலோகமாகிய செம்பு கண்டுபிடிக்கப்படுமுன் தடி தண்டுகளும் கல்லுமே அவனுக்கு ஆயுதங்களாக உதவின என்பது பிரசித்தம். கதை எனும் ஆயுதம் மிகப் பழமையானது. சுமேரியத்தில் அது கத் (khat) எனப்பட்டது. மரக்கட்டையே கதையாயிற்றுப்போலும்.

ஸப்ஸ்கிருதககதா (gada) எனுஞ் சொல்லே, தடியை ஸம்ஸ்கிருதம் தண்டம் (dandam) என வைத்துக்கொண்டதுபோலத் தமிழிலிருந்து மேற்கொண்டது எனலாம். கட்டை கத் கதை ஆகிய ஆயுதம் அப்பால் செம்பிலும் பின்பு இரும்பிலும் செய்யப்பட்ட காலேயில் அதன்பெயர் மிகத் திரிந்து புதுப் பாரசீகத்தில் கர்த் (kard), லிதுவானியத்தில் கர்தஸ் (kardas) ஆதியன வாகவும் ஸம்ஸ்கிருதத்தில் க்றுதி (kriti) எனவும் வந்தது. அதுதான் இன்று தமிழில் கத்தி ஆயிற்று என்ப.

நமது பாரையும் ஆதிகாலத்தது. அது ஒரு எறிபடையாயும் இருந்தது. அதை வடைமொழியாளர் பரசுஸ் அல்லது பர்சுஸ் (Parasus, parsus) என்பர். கிரேக்கத்தில் அதற்கு பெலெக்குஸ் (pelekus) என்று பெயர். அது சுமேரியத்தில் பலக் (balag), அசீரியத்தில் பிலக்கு (pilaggu) எனப் படும். சுமேரியத்தில் அது புலுக்கு (bulug) எனும் பிளத்தற்சொல்லி னின்று பிறப்பது என்பர். தமிழிற் பிளப்பது பாழை என வந்ததுபோலப் பாரையும் ஆயிருத்தல் சாலும். ஆகவே, பாரை, பரசு, பெலெக்குஸ், பலக், பிலக்கு: இவையெல்லாம் ஒருகாலம் ஒருங்குவதிந்தவர்கள் தமக்கு இன்றி யமையாத ஒரு பிளத்தற்கருவிக்கு இட்டபெயரே என்க.

தமிழ்நாட்டில் பூர்வந்தொட்டுவழங்கும் கவணும் இந்து-ஐரோப்பிய குலங்கட்குப் பொதுவானதுபோலும். கவண் கன்னடத்தில் கவணே, துளுவத்தில் கவணெ, மலேயாளத்தில் கவண எனப்படும். இச்சொல் எறியும் கருவியையோ கல்லேயோ முதலிற் குறித்ததென்பது தெளிவாயில்லே, சுமேரியத்தில் கவணுக்கு இர் (ir) என்று பெயர். அதைக்குறிக்கும் சித்திரலிபி எறிகருவியிற் கல்லுவைக்கின்ற பகுதியையே காட்டும் என்பர்.* ஆகவே இர் எனும் சொல் எறி எனும் தமிழோடு ஒத்தது எனலாம். ஆயின் கவண் எனும் சொல் எறியும் கருவியை அல்ல, கல்லேயே குறிக்கும் எனத் தோன்றும். கல்லுக்கு ஸ்லவோனிய பாஷையில் கமெனி (kameni), நோர்ஸ் பாஷையில் ஹமார் (hamarr) ஆங்கிலசாக்சனியத்தில் ஹமொர் (hamor) என்றும், பழஞ்சர்மானியத்தில் ஹமர் (hamar) என்றும் பெயர் உண்டு. கிரேக்க அக்மோனேயும் (akmon) ஸம்ஸ்கிருத அச்மனேயும் (asman) இவற்ருேடு ஒப்புநோக்குக.

[தொடரும்]

* Barton Origin and Development of Babylonian writing No. 229.

ஆராய்ச்சியின் முக்கியத்தன்மை *

[பேராசிரியர் ஜே. பி. மாணிக்கம் எம்.ஏ., எல்.டி. அவர்கள்.]

சர்வகலாசாலையின் காரியங்கள் மூன்று. தற்கால அறிவுத் துறைகளில் மாணவர்களுக்கு அறிவுபுகட்டுவது ஒன்று. சர்வ கலாசாலையிலோ அல்லது, அதைச் சார்ந்த கல்லூரிகளிலோ உள்ள ஆசிரியர்களின் மூலமாக இது நடைபெற்றுவருகிறது. ஆசிரியர் களின் துணையை நாடாமல், தங்களுடைய முயற்சியாலேயே அறி வைத் திரட்டிக்கொள்ளும் திறமையை மாணவர்களிடத்தில் வேரூன்றச்செய்வது மற்றொன்று. மாணவர்களைப் பரீக்ஷைகளில் தேறச்செய்வதைமட்டுமே தம்முடைய போதனையின் நோக்கமாகக் கொள்ளாமல், பாடங்களல்லாப் பிற புத்தகங்களையும் மாணவர்கள் பயன்படுத்தும்படி தூண்டி, வழிகாட்டும் ஆசிரியர்களால் இது நடை பெறுகிறது. மூன்றாவதுகாரியம் ஆராய்ச்சி. மற்ற இரண்டைக் காட்டிலும் இதுதான் முக்கியமானது. அறிவின் வரம்புகளை விசா லப்படுத்துவதே ஆராய்ச்சியின் லக்ஷியம். ஆசிரியர்களைப்போலவே மாணவர்களும் இந்தத் துறையில் முயன்று பாடுபடவேண்டும். ஏனெனில், இது இருவருக்குமே புதிதாகவுள்ளது.

நமதுநாட்டிலுள்ள சர்வகலாசாலைகளும் கல்லூரிகளும் அறிவு புகட்டுந்தொழிலை மிக நன்றாக நடத்திவருகின்றன. ஆயினும், தாமே முயன்று படித்தறியும் மனப்பான்மையை மாணவர்களிடத் தில் போதிய அளவில் அவை தோன்றச்செய்யவில்லை. இதற்கு ஆசிரியர்கள்மட்டும் பொறுப்பாளிகளல்லர்; மாணவர்களும் இக் குறைபாட்டுக்குப் பொறுப்பாளிகளே. ஆராய்ச்சித்துறையில் மாணவர்களைப் பழக்குவதிலும், ஆராய்ச்சிக்குவேண்டிய சௌகரி யங்களை ஆசிரியர்களுக்கு அளிப்பதிலும் நம் நாட்டுச் சர்வகலா சாலைகளின் வேலை பெரும்பான்மையும் திருப்திகரமாக இல்லை.

---

* சென்னை அகிலஇந்திய ரேடியோவில் பேசியதைச் சுருக்கியும் விரித் தும் எழுதியது. ரேடியோநிலைய அதிகாரிகளின் அனுமதிபெற்று வெளி யிடப்பட்டது.

ஆராய்ச்சித்துறையில் மாணவர்களைப் பயில்விப்பது அவசியம் என்பது சிலவருஷங்களாக உணரப்பட்டவிஷயம். 'நாளுபக்கங்களிலுமிருந்து இயற்கையன்னை பெரிய பிரச்னைகளை எழுப்பிக்கொண்டேயிருக்கிருள். அவற்றுக்கு விடையளிக்க மனிதரினம் அரும்பாடுபட்டு முயன்றுவருகிறது. புதுத்துறைகளில் ஆராய்ச்சிநடத்திவருவதே அதற்கு மிகவும் முக்கியமான துணைக்கருவி' என்று ஆசிரியர் மேல்டோலா கூறுகிருர்.

தற்காலத்து இந்தியமாணவர்கள் பாரம்பரையாக ஆராய்ச்சித்திறமைபெற்றவர்கள். நமது முன்னேர்கள் வைத்தியம், ரசாயனம், கணிதம் முதலிய துறைகளில் நடத்திய ஆராய்ச்சிகள் நம்மைச்சூழ்ந்த அயல்நாடுகளிலே பரவி, உலகஅறிவின் முன்னேற்றத்துக்கு ஒரு முக்கியகாரணமாக இருந்தன.

நமதுநாட்டின் புதல்வர் இருவர் ஆராய்ச்சியின் முக்கியத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றனர். ஸர் ஜகதீச சந்திரபோசும், ஸர் ஸி. வி. ராமனும் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலே உலகம் பாராட்டும் மகாமேதாவிகளாக விளங்குகிருர்கள். கல்கத்தாவிலுள்ள போஸ்நிலையமும் பங்களூரிலுள்ள ராமன் நிலையமும் இவர்களுடைய தந்நலம்பாராட்டாத உழைப்பாலும் பண உதவியாலும், இந்தியமக்கள் ஆராய்ச்சித்துறையில் ஆர்வம்கொண்டு ஈடுபடும்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

ஆராய்ச்சி எவ்வளவு முக்கியமானது என்பதைப்பற்றிக் காசி சர்வகலாசாலையிலே பட்டமளிப்புவிழாவின்போது தமது தலைமையுரையில் ஸர் ஸி. வி. ராமன் பின்வருமாறு கூறினர்.

'அறிவை நாடுவதே ஆராய்ச்சி. ஆகையால், கல்விமுறைகள் எல்லாவற்றிலும் அதுவே அடிப்படையான திட்டமாக அமையவேண்டும். புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதே சீரிய ஆராய்ச்சி. மேன்மேலும் பெருகிவரும் அறிவுத்தொகுதியின் தத்துவத்தைத் தெரிந்துகொள்வதும் ஆராய்ச்சியாலேதான். நீங்கள் அனைவரும் அறிவைத் தேடுவோராயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் பின்தங்கிவிடுவது நிச்சயம்'.

நாம் வாழும் உலகத்தையும் நமது கைக்கெட்டிய சக்திகளையும்பற்றி நாம் தெரிந்துகொண்டவை யாவும் ஆராய்ச்சியாலேயே நமக்குக்கிடைத்தவை. உலோகங்கள் ஒளிந்துக்கிடக்கும் சுரங்கங்களைக் கண்டுபிடிக்க முயலும் பூதத்துவசாஸ்திரிக்கு ஆராய்ச்சியாளனை ஒப்பிடலாம். அக்கம்பக்கத்திலுள்ள மலட்டுப்பாறைகளைப் போலவே சாமானியக்கண்களுக்குத் தோன்றும் சிற்சில பாறைகளில் அளவிறந்த செல்வங்கள் நிறைந்துகிடப்பது அறிவால் உற்றுநோக்கும் பூதத்துவசாஸ்திரியின்கண்களுக்குமட்டுமே புலப்படும். நிலக்கரியைச் சார்ந்த கீல்-எண்ணெயிலிருந்து மதிப்பற்ற சாயங்களையும் ரசாயனப்பொருள்களையும் பெறக்கூடும் என்று ஆராய்ச்சி உணர்த்தாவிட்டால் யாருக்காவது தெரிந்திருக்குமா? தனிப்பொருள்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுக்குந் துறையிற்செய்த ஆராய்ச்சிகளால், சென்ற அரைநூற்றாண்டில் உலோகங்களைப்பற்றிக் கண்டுபிடித்த விஷயங்கள், மனிதன் உலோகங்களைப் பயன்படுத்தத்தொடங்கிய பண்டைக்காலம்முதற் கழிந்த பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெற்ற அறிவைக்காட்டிலும் அதிகமானவை.

நம்மைச்சூழ்ந்துள்ள பொருள்களின் குணங்களையும், சக்திகளையும்பற்றி நமக்கிருந்த அறியாமையைநீக்குவதும் விஞ்ஞான ஆராய்ச்சியின் ஒரு பயன். அவைகள் யாவை? அவைகளைப் பயன்படுத்துவது எப்படி? என்றெல்லாம் ஆராய்ச்சியால் நாம் அறிகிறோம். சீட்டாடும் ஒருவன் தன்கையிலுள்ள சீட்டுக்களைப் பார்க்காமல் விளையாடினால், எப்படித்தவறான ஆட்டம் ஆடுவானோ, அதைப் போலவேதான், ஆராய்ச்சியாற் பெறும் அறிவு இல்லாவிட்டால் மனிதன் தன் வாழ்நாள்முழுவதும் தவறுக்குமேல்தவறு செய்துகொண்டேயிருப்பான்.

ஆராய்ச்சியின் முக்கியத்தன்மையை ஒப்புக்கொள்ளுகிறவர்களுங்கூட, ஆராய்ச்சிக்குவேண்டிய வசதிகளைச் சர்வகலாசாலைகள் செய்வானேன்? அரசாங்கமாவது தொழிற்சாலை அதிகாரிகளாவது ஏன்செய்யக்கூடாது? என்று கேட்கலாம்.

உலகவாழ்க்கையில் அவ்வப்போது தோன்றும் சிற்சில பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு விஞ்ஞான அறிவை உபயோகிக்கும்முறைகளைப்

பயன்தரும் விஞ்ஞானமுறைகள் என்று கூறலாம். தினசரிவாழ்க்கையிற் பயன்தரக்கூடிய துறைகளில் விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடத்துவதும், அவற்றுக்கேற்ற ஆராய்ச்சிநிலையங்களை ஸ்தாபித்து நடத்திவருவதும் அரசாங்கத்தாரும் தொழில்நிலைய அதிகாரிகளும் செய்யவேண்டிய கடமை. உண்மைதான். ஆனால், சீரிய தனித்த விஞ்ஞான ஆராய்ச்சிமுறைகளில் இளைஞர்களைப் பயில்விப்பது சர்வகலாசாலைகளின் காரியம். இவற்றைத் தூய-விஞ்ஞான முறைகள் என்று கூறலாம். அறிவைவளர்ப்பது ஒன்றையே கருத்தாகக்கொண்டு, ஆராய்ச்சிகளையும் சோதனைகளையும் நடத்துவதே தூய-விஞ்ஞான ஆராய்ச்சி. ஆகவே, மக்கள் அறிவின் எல்லையை மேன்மேலும் விரியச்செய்வதையே தம் முக்கிய லக்ஷியமாகக்கொண்ட சர்வகலாசாலைகளில் தவிர வேறு எங்கே இளைஞர்களைத் தூய - விஞ்ஞானமுறைகளில் நன்கு பயில்விக்கமுடியும்?

இவ்வாறுகிடைக்கும் அறிவின் எந்தப்பகுதியாவது ஏதாவதொரு தொழிற்றுறையிலே பயன்படுமா? படாதா? என்பதை முன்னதாகவே தெரிந்து ஜோஸியம்சொல்வது சாத்தியமில்லை. நூதனமாக இயற்றப்பட்டுவரும் விஞ்ஞான அற்புதங்களைக் கவனித்துப்பார்த்துப் படிப்படியாக ஆராய்ந்தால், தூய - விஞ்ஞான முறைகளிலே கண்டுபிடிக்கப்பட்ட ஏதாவதொரு புதியவிஷயமே அவற்றின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாயிருந்தது என்பது துலங்கும். தொழிற்செல்வம் விருத்தியடைவதற்கும் மக்கள்வாழ்வு மேம்படுவதற்கும் உதவிபுரியும் எத்தனையோ புதிய விஷயங்களை உரமிட்டு வளர்த்தது தூய - விஞ்ஞானமேயாகும். இதற்கு எத்தனையோ சான்றுகள் கூறலாம்.

எக்ஸ் - கிரணங்கள் செய்யும் காரியங்களிற் சில எல்லாருக்கும் தெரிந்தவை. சாதாரண ஒளி - ஊடுருவஇயலாத பல பொருள்களின் உட்புறத்தை அவற்றின்மூலமாக அறியக்கூடும். ரணவைத்தியர்களும் நோய்வைத்தியர்களும் மனிதவுடலின் உட்புறத்தை எக்ஸ் - கிரணங்களின் துணையால் சோதித்தறிகிறார்கள். இக்கிரணங்கள் அவர்களுக்குப் பெருந்துணைசெய்கின்றன. அறிவின் எல்லைகளை விசாலமாக்குவதையே தனிநோக்கமாகக்கொண்ட

ஆராய்ச்சிச்சோதனைகளின் விளைவாகவே எக்ஸ்-கிரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

காற்றை முழுவதும் அகற்றி, வெற்றிடமாகச்செய்த ஒரு குழாயின் ஊடே தெறித்துச்செல்லும் மின்பொறியை வைத்துக் கொண்டு ரேண்ட்கேன் ஒருநாள் சோதனைகளை நடத்திக்கொண் டிருந்தார். மின்பொறி வீசிய சிற்றொளியும் அவருடைய சோதனைக்கு இடையூறாக இருந்ததால், ஒளி - ஊடுருவாப்பொருளைக் கொண்டு அவர் அந்தக் குழாயை மறைத்தார். குழாயினின்று ஒளி சிறிதும் வெளியே தோன்றாமலிருக்க அவர் முயன்றபோதி லும், அக்குழாயிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்த ஏதோ ஒன்று பக்கத்திலுள்ள போட்டோத் தகட்டைப் பாதிப்பதைக் கண்டார். முன் ஒருவரும் கண்டறியாத இந்தப் புதிய கிரணத் துக்கு எக்ஸ் - கிரணம் என்று பெயரிட்டார். அக்கிரணத்தின் குணங்களை ஆராயத்தொடங்கி, முறையாகத் தெரியமுயன்றார். அந்தக் கிரணங்களைப்பற்றி அவருக்கு முன்னால் ஒன்றுமே தெரியாது. ஆகையால் அவற்றால் மனிதவர்க்கத்துக்கு அளவற்ற பயன்விளையக்கூடும் என்று அவர் கனவிற்கூட நினைத்திருக்கமுடியாது. தூய - விஞ்ஞானத்துறையில் அவர் ஈடுபட்டு ஆராய்ச்சியை நடத்தியதே, வைத்தியத்துறையிலும் தொழிற்றுறையிலும் பௌதிகசாஸ்திரத்துறையிலும் மிக மிக உதவிபுரியும் முக்கியமான ஓர் கருவியைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாயிருந்தது.

ஹீரோஷிமாவின்மீது அணுகுண்டை எறிந்து, அதை நாசமாக்கிய அன்று அணுயுகம் தொடங்கிவிட்டது என்று திடுக்கிட்ட உலகம் அறிந்தது. இவ்வாறு அணுவிலுள்ள சக்தியை விடுவித்து, அதைப் பயன்படுத்தத்தொடங்கியதை ஆதிகாலத்திலே மனிதர் நெருப்பைக் கண்டுபிடித்து அதை வழங்கத்தொடங்கியதோடு ஒப்பிடலாம். யுரேனியம் அடங்கிய ஒரு கூட்டுப்பொருள் இடைவிடாது வீசிக்கொண்டிருந்த கிரணங்களைத் தனித்த தூய - விஞ்ஞான முறையில் பெக்கேரல் ஆராய்ந்ததன்பயனாகவே அணுயுகம் உதயமாயிற்று.

பிற விஷயம் ஒன்றையும் கவனியாமல் தாங்கள் விடையறிய முயலும் பிரச்னைகளில் முழுதும் ஈடுபட்டு, அத்துறைகளில்

அறிஞர்கள் தீவிரமாகச் சோதனைகளை நடத்திவருவார்களானால், விஞ்ஞான அறிவின் எல்லை மிகவும் துரிதமாக விரிவடைந்து வளரும். மனிதர் இப்பொழுது அறிந்துகொண்டிருக்கும் அறிவின் தொகுதி மிகப் பெரியதாயும் ஆழ்ந்ததாயும் இருப்பதால், எத்துணை சிறந்த அறிஞனும் இரண்டொருதுறைகளில்மட்டுமே வல்லவனாயிருக்கக்கூடும். ஆகையால் அறிவுவளர்ச்சி விரைவாக நிகழவேண்டுமாயின், பலதுறைகளில் வல்ல அறிஞர்பலர் ஒருமித்து முயலவேண்டும். சமீபகாலத்தில் பெனிஸிலினைக் கண்டுபிடித்து, அதைப் பல்வகையாய் உபயோகிக்கத்தொடங்கியதை இதற்கு ஓர் உதாரணமாகக்கூறலாம். பாக்டீரியா என்னும் நுண்ணுயிர்களை ஆராய்பவர்களும், ரசாயனிகளும், வைத்தியர்களும், ஒன்றாகக்கூடி ஒத்துழைத்து, இந்த அற்புதமான மருந்தை உலகத்துக்கு அளித்தார்கள். இந்தத் துறைகளெல்லாம் ஒன்றாகப் பொருந்தியுள்ள இடம் சர்வகலாசாலையே. அங்கே அல்லாமல், இவ்வகையான ஒத்துழைப்புக்கு வேண்டிய சௌகரியங்கள் வேறு எங்கே கிடைக்கமுடியும்?

மின்சாரவிளக்கு, மின்சாரமோட்டார், தந்தி, டெலிபோன், ரேடியோ, ரேடார் இன்னும் இவைபோன்ற கணக்கற்ற புதிய கருவிகளைக் கண்டுபிடிக்கக் காரணமாயிருந்த இயற்கைவிதிகளெல்லாம் தூய - விஞ்ஞான ஆராய்ச்சியால் அறியப்பட்டன. அதாவது குறித்த ஒருகருவியையோ அல்லது வேண்டப்பட்ட ஒருபொருளையோ இயற்றுவதையே முழுநோக்கமாக, முன்னணியிற் கொண்ட சோதனைகளால் இவை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகையால் தூய விஞ்ஞானத்துறையில் ஆராய்ச்சிநடத்துவதற்கு மேன்மேலும் ஊக்கமளிப்பது அவசியம்.

இவ்வகை ஆராய்ச்சிகளுக்கு ஏற்ற இடங்கள் சர்வகலாசாலைகளே. அங்கு ஆராய்ச்சிகளை நடத்துவதற்குப் போதியநேரமும் பணமும் அளிக்கப்படல்வேண்டும். மிகமிக முக்கியமாகஉள்ளது நேரம். இதைச் செலவிடுவோருக்கு வேண்டிய ஊதியமளிப்பதும் அவசியம். ஆராய்ச்சித்திறமைவாய்ந்த பலர் வேறுவகையாய்ப் பொறுப்பான உத்தியோகங்களில் அமர்ந்து வேலைசெய்துவாக்

காண்கிறோம். அவர்களுடைய விலைமதிப்பற்ற நேரத்திற் பெரும் பகுதி அத்துணை முக்கியமில்லாப் பிற காரியங்களில் வீணாகச் செலவாகிறது. அக் காரியங்களால் அவர்கள் சோர்வடைந்து ஊக்கம் குன்றுகிறார்கள். பாடங்களைக் கற்பிப்பதிலும் நிர்வாகத்திலும் அவர்களுடைய அரிய நேரம் வீணாகிறது. அவர்களுக்கு அளிக்கப்படும் சோதனைக்கருவிகளும் உபகரணங்களும் அத்துணைச் சிறந்தவையல்ல. இன்னும் அதிக அளவில் நல்லகருவிகளை அவர்களுக்கு உதவுவது அவசியம்.

கலாசாலைகளிலே கற்று, ஆராய்ச்சிமுறைகளில் நன்குதேர்ச்சி பெற்ற அறிஞர்களே பயன்தரும் விஞ்ஞானமுயற்சிகளைநடத்தும் நிலையங்களில் வேலைசெய்வதற்கு ஏற்றவர்கள். ஏனென்றால், தூய விஞ்ஞானத்துறையிற் கண்டுபிடிக்கப்படும்விஷயங்களே பயன்தரும் விஞ்ஞானமுயற்சிகளில் உபயோகப்பட்டு உலகத்துக்கு நற்பயனளிக்கின்றன.

பன்னிருதிங்கட்பெயரும்வந்த பாட்டு

ஸ்ரீ ரா. இராமாநுஜையங்காரவர்கள், தமிழாசிரியர், இராமநாதபுரம்.

[என்னுடைய தந்தையாரான ஸேதுஸமஸ்தான மஹாவித்வான் பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்களால் பன்னிருமாதப்பெயரும் முறையே தொனித்து நிற்கும்படி ஒருபாடல் இயற்றப்பட்டுளது. அதிற்கூறும் பொருள் இக்காலநிலைக்கேற்றதாயிருத்தலின் அதனைச் செந்தமிழ்நேயரும் படித்து ரஸிக்குமாறு, அவர்கள் எழுதிய உரையுடன் இங்கு வெளியிடலானேன்]

உயிர்பசித்திரையின்றிவைகாசிறக்
தோரிவ்வாணியுணர்பிறிதாடினர்
நயமிலாவணிக்கும்முடைக்கும்முழல்
ஞாலம்பல்புரட்டாதியெலாஞ்செயுந்
தயிரியத்தைப்பசிகெடுக்கின்றது
தண்ணங்கார்த்திகைப்பிக்கின்றகூந்தலின்
மயல்செயும்மங்கைமார்கழிநல்லதை
மாசின்விட்டனர்தன்பங்குனிக்குமே.

இதன் பொருள்,— உயிர்கள் பசித்து இரையின்றி வைகா. சிறந்தோர் இந்த ஆனியை உன்னார் (ஆனி - கேடு). உயிர்கள் பசி நீங்க இரைபெற்றுவாழ ஒன்றுசிந்திக்காமற் சிறந்தோர் பிறிது ஆடினார் (-சிறந்தோரும் வேறொன்றைச் சொற்றார்). நயம் இல்லா அணிக்கும் உடைக்கும் உழல்கின்ற ஞாலம், பல புரட்டு முதல் எல்லாத் தீங்கையும் செய்யும். தயிரியத்தைப் பசிகெடுக்கின்றது. குளிர்ந்த அழகிய மேகத்தை மயக்குவிக்கின்ற கூந்தலால் மயலைவிளைக்கின்ற மங்கையர்களும் மிக நல்லதொன்றைக் குற்றம்போல விட்டனர். (குற்றத்தை நல்லதுபோலக்கொண்டனர்). இவற்றால் துன்பமானது நடனஞ்செய்கின்றதென்று இக்கால இயல்பு கூறியவாறு.

இக்காலத்துச் சிறந்தோர்சிலர் பிறரைவென்று பசிநீங்க வேண்டுமென்று அவ்வென்றிக்குபாயமாகப் பிறிதுபிறிது பேசினார். பசிநீக்கமே முதற்கட் செய்யவேண்டுமென்பது கருத்து.

பசிநீங்கிப் போர்வெல்வதோ? போர்வென்று பசிநீங்குவதோ? என்று வினவிக்கொள்க. பிரகிருத ஞாலம், உயிர்க்கு இன்றியமையாத பசிநீக்கமுயற்சி குறைந்து, உடலுக்கு அத்துணை வேண்டப்படாத அணிக்கும் உடைக்கும் உழல்கின்றது. பழமையாய் இந்நாட்டுக்குள்ள தயிரியம் ஒன்றுண்டே எனின், அதனையும் பசிகெடுக்கின்றது. பெண்பாலாரும் நன்றுசெய்யாராய்த் தங்கட்கு உரியதருமத்தை அதர்மம்போல விட்டனர். இவற்றால் இந்நாட்டுள் துன்பம் நர்த்தனஞ்செய்கின்றது என்று இரங்கியவாறும்.

பசிநீக்கும் முயற்சியே இந்நாட்டுக்குவேண்டுமென்றும், அணிக்கும் உடைக்கும் முயல்வது அத்துணை வேண்டாமென்றும், பெரியோர் பசி நீக்குமாறு சிந்திக்கவேண்டுமென்றும், தைரியம் கெடாது பாதுகாக்கப்படவேண்டுமென்றும், மங்கைமார் அணியும் உடையும் சுருக்கி நன்றே செய்யவேண்டுமென்றும் அப்போதுதான் இன்பம் நர்த்தனஞ்செய்யுமென்றும் குறித்தவாறுங் காண்க.

திருக்கருவை வெண்பாவந்தாதி

திருவாளர். பண்டித இராமசுப்பிரமணியநாவலரவர்கள்,
செந்தமிழ்நிலையம், பதுமநாபபுரம், தக்கலை.

இப்பிரபந்தம், கருவை என்னும் நகரில் அமைந்த திருக்கோயிலின்கண் களாமரத்தடியில் வீற்றிருக்கும் சிவபெருமான்மீது அந்தாதித்தொடையால்வரும் நூறு நேரிசைவெண்பாக்களால் இயற்றப்பட்டது. இதனை இயற்றியவர், அதிவீரராமபாண்டியன் * என்னும் அரசர்பெருமானவர். இவரது பத்திமையும் உயர்ந்த கருத்துநயங்களும் அணியமைதியும் பிறவும் இவ்வந்தாதிச்செய்யுள்கொண்டு இக்கட்டுரையுள் ஒரு சிறிது விளக்கலாகும்.

அந்தாதியென்பது தொண்ணூற்றாறுவகைப்பிரபந்தங்களுள் ஒன்று. ஒரு பாட்டின் இறுதிநின்ற எழுத்து, அசை, சீர், அடிகளில் ஒன்று மறுபாட்டிற்கு முதலிலே வர மண்டலித்துப்பாடுவது அந்தாதியென்க.

இச்சிறுபிரபந்தம், சிறந்த சொல்லொழுக்கும் எளிமையும் வாய்ந்து பத்திச்சுவையைப் பண்படப்புகட்டும்பான்மையது. எதுகை மோனைத்தொடைகள் இதன்கண் சிறப்ப அமைந்துள்ளன, இது, சீர் என்னும் மங்கலம் கொண்டு தொடங்குகின்றது.

கருவை யென்பது திருநெல்வேலி ஜில்லாவுள் சங்கரநயினார் கோயிலையடுத்துள்ளதொரு சிவத்தலம். 'திருக்களாவாழும் சிவம்', 'களாவின்கட்கனி', 'களவீசன்' என்றற்றொடக்கத்தன இறைவன் கருவையிற் களாமரத்தடியில் வீற்றிருப்பதையுணர்த்தும். இத்தலத்திறைவனை ஆசிரியர் பால்வண்ணநாதன், முகலிங்கநாதன், வீதிவிடங்கன், கருவையாரியன், காமாரி முதலிய பெயர்களாற் சுட்டுவர்.

சிவபெருமான் அருச்சுனனுக்குப் பாசுபதம் அளித்தது, பாற்கடல்நஞ்சுண்டது, காமனையழித்தது, திரிபுரமெரித்தது, அகத்தியனுக்கு மணக்கோலங்காட்டியது, யானையுரிபோர்த்தது, கூற்றை

* இவரைப்பற்றி அறியவேண்டியசெய்திகள், செந்தமிழ் ௪௨-ஆம் தொகுதியில் ௮0-முதல் ௮௪ முடியவுள்ள பக்கங்களில் வெளியிடப்பட்ட அதிவீரராமபாண்டியன் என்ற கட்டுரையிற் சுருக்கிக்கூறப்பட்டுள்ளன.

யுதைத்தது, முருகனிடத்துபதேசம்பெற்றது, அடிமுடியற்ற ஆரழலாய்நின்றது, புலித்தோலணிந்தது, உபமன்யுவுக்குப் பாற்கடலீந்தது, சாக்கியநாயனாராற் கல்லேலறுண்டது, பார்த்தனால் வில்லேறுண்டது, பாண்டியனாற் பிரம்படிபட்டது முதலிய வரலாறுகள் இதன்கண் சுட்டப்பட்டுள்ளன.

பத்திச்சுவை.

பத்திமைபயின்றறியாதார் பத்திச்சுவைதோன்றவேண்டும் என்று கருதிப் பாடுவன அச்சுவை பொலிந்துதோன்றப்பெறா. உண்மைப்பத்தியுடையார் சிலசொற்கூறினும், பத்திச்சுவை பாங்கொழுகக் காணலாகும். இப்பிரபந்தத்துள்வரும் பல பாடல்கள் ஆசிரியரது உண்மையான பத்தியைப் புலனாக்குகின்றன.

உடம்புள்படத் தமக்குரியன எனக் கருதப்படுவன எல்லாவற்றையும் இறைவனுக்கே ஆக்கி, அவனிடம் ஒன்றுபட்டுநிற்பதே உண்மைப்பத்திமையாகும். இறைவனே புகல் என அவனது அருளைவேட்டுநிற்பதும், தம்செயல் யாதும் இன்றென்றுகருதித் திரிகரணங்களாலும் அவனை வழிபடுவதும் முதலியவை பத்தர் இயல்புகளாம்.

"நின்பொற் கழலல்லாற் காதலித்த
தொண்டனேற் குண்டோ துணை"
"நாத முகலிங்கவுனை-என்நாள் நினைப்பேன் இனி"
"அடியேற்கு வேண்டுவதுன் பேரே மிக"
"பால்வண்ணா என்றழைப்பேன் வேறறியேனே"
"மானிடரால் உண்டோ வரம்"
"உளவருத்தம் தீர உவந்தெனைவந் தாண்டான்
களவனத்தில் ஒப்பனைபாகன்"
"தென்கருவை வேந்தே பரிந்தடிமை கொள்வாயிப் பால்"
"யானிரங்க நீயிரங்காய் என்"

என்பவற்றால் ஆசிரியரது உள்ளம் பத்தியில் அழுந்தி இறைவனையே பற்றாகக்கொண்டு ஈடுபட்டமை விளங்கும்.

யாவன் அமரர் இடர்தீர நஞ்சுண்டான்
யாவன் கருவை யினிதுறைந்தான்—யாவன்
தவநேர்மை கண்டு தனக்கடிமை கொள்வான்
அவனே எனையாண்டவன்

என்பதனுள், சிவபெருமான் தேவர்துன்பந்தீர நஞ்சினையுண்டு அவரைக்காத்த அருட்செய்கையில் ஈடுபட்டு, ஆசிரியர் அத்துணை இரக்கமுடையானாதலின் தம்மையும் ஆட்கொள்வான் என்று துணிந்து, 'அவனே எனையாண்டவன்' என்கிறார். ஆசிரியர்க்கு முக்கட்பிரானிடத்துள்ள எல்லைகடந்தபத்திக்கு இதுவும் சான்றாகின்றது.

அன்றியும், ஆசிரியர் மதிக்கண்ணியானை மறவாத மாண்புடையரென்பது,

இறைப்பொழுதும் நீங்கா திருகண்ணும் நெஞ்சும்
கறைக்களமும் செஞ்சடிலக் காடும்—பிறைக்கொழுந்தும்
புண்டரிக வாண்முகமும் பூங்களவின் நீழலோன்
ஒண்டாளப் புன்மூரலும்

தானேவந் தென்னைத் தடுத்தடிமை கொண்டானை
யானே பிறக்கும் எழுபிறப்பும்—வானிற்
சிறந்திருக்குந் தென்கருவைச் செல்வனை யென்னுமல்
மறந்திருக்குமோவென் மனம்

என்பவற்றால் நன்குவிளங்குகின்றது. மேலும்,

சிவகருமம் செய்யார் திருநீறு சாத்தார்
தவமிலையாம் சைவநெறி சாரார்—அவனிதனிற்
கான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்
ஏன்பிறந்தார் மானிடராய் இன்று

வாசித்தேனில்லை வரதன் சிவாகமங்கள்
பூசித்தேனில்லையவன் பொன்னடிகள்—நேசித்தே
ஒப்பனையாள் கேள்வனென வோதித் துதித்திலேன்
எப்படியான் ஈடேறுவேன்

என்பவற்றால், சைவசமயத்திலும் சிவசின்னங்களிலும் சிவவழிபாட்டிலும் சிவாகமம் முதலியவற்றிலும் ஆசிரியர்க்குள்ள பற்று நன்குபுலனாகும்.

நலனழிந்து மூப்படைந்து நாணழிந்து நோயால்
புலனழிந்து கண்புதையும் போதில்—உலக
இறைவியொடு பால்வண்ணா! என்றென் றனையே
மறுகியழைப்பேன் ஓடிவா

என்பதனால் யாக்கைநிலையாமைகாட்டி, "என் இறுதிக்காலத்து யான் பால்வண்ணனே! என உன்னையே விளிப்பேன். அதுகொண்டு நீ எனக்கு வெளிவந்து அருள்புரியவேண்டும்" என்ற ஆசிரியர், "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை-மேற்சென்று செய்யப்படும்" என்பதுகொண்டு பின், "இறுதிக்காலத்து வழுத்தும் வன்மை என் நாவிற்கு இலதாகும். ஆதலால் யான் இப்பொழுது அழைத்துத் துதித்துவேண்டுவதையே என்னுடைய இறுதிக் காலத்துவேண்டுகோளாகக்கொண்டு அருள்புரியவேண்டும்" என்ற பொருள்பட,

சாதல் முடுகில் தனைமறந்து நாஇரங்கும்
மாதுயரிற் சற்றும் வழுத்தறியேன்—ஆதலினால்
அப்பொழுதைக் கிப்பொழுதே அன்பால் வழுத்துகின்றேன்
ஒப்பனையாள் பாகா உனை

என்று கூறும் பாடல் படித்துப்படித்து இன்புறத்தக்கது.

சிறந்த கருத்துக்கள்

இளமைநலமும் வாழ்நாளும் நிலையாதவையென்றுணர்ந்து உருகி இறைவனைப் பரவுதல்வேண்டும்; இறைவனுடைய பெயர்களையெண்ணித் துதியாதவர்கல்வி பயனற்றது; ஆகவே அவர் கற்கின்ற நூல்களெல்லாம் பயனுதவுவனவல்ல என்பது விளங்க,

சென்றது காலம் சிதைந்த திளமைநலம்
நின்றதுசா வென்று நினைந்துருகி—மன்றில்
நடிக்கின்ற பால்வண்ணன் நாமமெண்ணு மாந்தர்
படிக்கின்ற நூலெல்லாம் பாழ்

என உரைத்த பாடலுள், "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் - நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் தமிழ்மறைக்கருத்து நன்கு அமைந்துவிளங்குகிறது.

'களவீசனே! நான் நன்மையிழந்துவருந்துவேனாயின் அதுபற்றி உலகினர் என்னைமட்டும் இகழ்ந்து நகையாடுவரென்று கருதவேண்டா. அதற்கு நீயேகாரணன் எனக்கொண்டு நின்னைச்சிரிப்பாரும் உண்டு' என்பது புலப்படச்செய்த,

நானிலத்தார் முன்னே நலனழிந்து நானிருந்தால்
கான நறும்பூங் களவீச—ஈனமுறைத்
தென்னைச் சிரிப்பரென் றெண்ணுதே எம்பெருமான்!
உன்னைச் சிரிப்பாரும் உண்டு

என்னும் பாடலில் இறைவனருட்டிறத்தினையே யாவற்றுக்கும் காரணமாகக்கொள்வாரும் உளர் என்னுங்கருத்தும் இனிது தோற்றுவித்த கவிசாதுரியம் உற்றுநோக்கி உவக்கத்தக்கது.

நானே யறிந்தவனை நாடற் கெளிதாமோ
கானேர் பசிய களாவனத்தான்—தானேயென்
உள்ளச் சிலையை உலைவாய் மெழுகெனவே
மெள்ளக் கரைக்கா விடின்.

என்பதனுள், "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்னும் பெரியோர்வாக்கினைத்தழுவி, இறைவனை வணங்குதற்கும் அவனருள்வேண்டும்: என்னும் சமயநூற்கருத்து இனிதமைந்து விளங்குகிறது.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன் - நாமம் கெடக் கெடும் நோய்" என்னும் தமிழ்மறையை அடியொற்றியெழுந்த,

மனமொழிந்து காம மயக்கொழிந்து மாறுச்
சினமொழிந்து வாதனையும் தேய்ந்தால்—இனிய
குருக்களாய் வந்தடிமை கொண்டுவீ டுய்க்கும்
திருக்களா வாழும் சிவம்.

என்னும் பாடலுள், இருவினையொப்பு மலபரிபாகம்வந்துழி இறைவனே ஆசிரியனுயெழுந்தருளிச் சிவதீக்கைசெய்து வீடுபேற்றையும் அருள்வன் என்னும் சைவசமயநூற்பொருள் அமைந்துள்ளது.

அணியமைதி.

பத்திச்சுவைபயிலும் இச்சிறுபிரபந்தத்தில் ஆசிரியாது அணி நயமமைந்த நாவன்மை ஆங்காங்குப் புலனுகின்றது. ஒரு சில அணியமைதி இங்கே காட்டப்படும்.

"கற்புடைய பெண்ணொருத்தி கணவன் தன்னை விரும்பினும் விரும்பாவிடினும் அவனையே தான் விரும்பியிருப்பள்; அதுபோலக் களவீசனே! நீ என்பால் இரங்கினும் இரங்காவிடினும் யான் நின்னையே விரும்பியிருப்பேன்" என்னும் பொருளமைந்த,

இரங்கா யெனினும் இரங்கினும்யான் வேண்டும்
பரங்காண் கருவைப் பரனே—நிரந்தரமும்
இற்கணவன் நீத்தாலும் நீங்கா திருக்குமொரு
பொற்புடைய கற்புடையாள் போல்.

என்னும் பாடலிற் போந்த உவமைநயம் உவகையூட்டுந் தரத்தது.

இடர்க்கடலுக் கோடம் இதய இருட்கென்
றுடற்பகையை வேரறுக்கும் ஒள்வாள்—இடப்புறத்தைச்
சூல்வண்ண மேகச் சுரிகுழலுக் கீந்தருளும்
பால்வண்ண நாதன் பதம்.

என்னும் பாடலிற் பால்வண்ணநாதன்பதத்தினைத் துன்பமாகிய கடலைக்கடத்தற்குரிய புணை, மனவிருளைநீக்கும் சூரியன், பிறவியாகிய பகையை அடியறுக்கும் மழுங்காத வாள்: என நயமிக உருவகித் துரைத்தமை காண்க.

ஏறுவது கொல்லேறு எரிசுடலை யாடரங்கு
கூறைபுலித்தோல் மணிப்பூண் கோளரா—நாறு
காரந்தை யணிகருவைக் காபாலிக்கு என்பால்
வரந்தர வேறுண்டோ வகை,

ஏறுபட்டும் கல்லால் இருஞ்சிலையால் எற்றுண்டும்
ஆறுகட்ட மாற்றால் அடியுண்டும்—ஊறுபட்ட
வாதையாலோ கருவை வாணனே பொன்மேனி
பாதியாய்த் தேய்ந்தாய் பகர்.

என்பவற்றுள் முறையே நிந்தாத்துதியும் தற்குறிப்பேற்றமும் நகைச்சுவைமிக அமைத்த கவித்திறம் உணர்ந்துணர்ந்தின்புறத் தகும்.

முடிவாக ஆசிரியரது மறந்தும் புறந்தொழாமாண்பு விளங்க ஒரு பாடலைத்தந்து இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

உனைத்துதித்த நாவால் உறுதியென்றோர் தெய்வம்
தனைத்துதியேன் சென்னியுறத் தாழேன்—நினைத்துணையும்
சிந்தியேன் வாழ்த்தேன் திருக்களவில் நாயகனே
வந்தியேன் பற்றேன் மனம்.

பூண்டி அரங்கநாதமுதலியார் தனிக்கவிகள்

[திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், மயிலாப்பூர், சென்னை.]

பூண்டி அரங்கநாதமுதலியாரைப்பற்றி மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், கலைமகள் ஆநந்தவிகடன் முதலிய பத்திரிகைகளிற் சில ஆண்டுகளுக்கு முன் சிறப்பித்தெழுதினதைத் தமிழன்பர்கள் கண்டிருக்கலாம். முதலியார் 50ஆண்டுகளுக்குமுன்னே சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் பேராசிரியராக விளங்கியவர்; கூர்த்தமதியினர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் கணிதசாத்திரத்திலும் தர்க்கசாத்திரத்திலும் வல்லவர்; பேசும் ஆற்றல் உடையவர்; எழுதுவதிலும் வன்மையுடையவர்; தமிழ்ப்பண்டிதர்களைப் பெரிதும் ஆதரித்துப் போற்றியவர்; வைணவ குடும்பத்திற் பிறந்தவரேயெனினும் சைவப் பற்றுப் பெரிதும் உடையவர். இவர் பாடிய கச்சிக்கலம்பகம் இவருடைய தமிழ்ப்பாடல்பாடும் ஆற்றலையும் சைவாபிமானத்தையும் காட்டும். இவர் தம் காலத்திற் பெரும்புலவர்களாக விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, திரிசிரபுரம் தியாகராயசெட்டியார், புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியார், திருமயிலைக் * கதிர்வேல் உபாத்தியாயர் முதலியவர்களிடத்தில் மிக்க விசுவாசம் உடையவரென்பது இவர் கி.பி. 1889-ஆம் ஆண்டில் கதிர்வேல் உபாத்தியாயர் காலஞ்சென்றபோது பாடிய பின்வரும் சரமகவிகளால் அறியலாம். அக்கவிகள் பின்வருமாறு:—

---

* கதிர்வேல் உபாத்தியாயர் பெரிய ஆசியப்புலவர்; சேலம் இராமசாமி முதலியார் முதலிய பேரறிஞர்களால் நன்குமதிக்கப்பெற்றவர்; சைவ புராணிகரும் தமிழ்ப்பண்டிதருமாயிருந்த வெள்ளியம்பல உபாத்தியாயரின் மைத்துனர்; குடும்பவாழ்க்கையைப் புறக்கணித்துச் சிவபூசையை மேற்கொண்ட பெருஞ்சீலர்.

அருவார மாலை நிழலமர்ந் தாரன்பர் நெஞ்சமர்ந்தார்
திருவார மாலைத்த னுவம்மைத் தார்க்கன்பு செய்தவர்பாற்
குருவார மாலை யவித்த குணநிதி கோதுடலங்
குருவார மாலை வெறுத்தது கூறுந் தகைமையதே. (1)

கூறத் துணிந்த தமியனுங் கூரிய நுண்ணறிவாற்
றேறித் தெளிதமிழ்த் தீஞ்சுவை மாந்துந் திறமுடைய
வீறின் செயலல்ல வேதனன் றிட்ட விதிப்படியே
ஆறற் கருந்துய ராழ்ந்தேனென் றோத வருத்தியொன்றே. (2)

நண்பனினைப் பிரிந்ததுயர் நனிவருந்த நாளுகமாய்க் கழிக்கின் றேனந்
தண்புனல்பாய் சடைக்கும்ப நாயகர்தந் தண்ணளியித் தகைய தாமென்
றெண்பதுநாட்பிரிவினுக்கேயியம்பியயானெவ்வண்ணம்பொறுப்பேன்மாண்ட
பண்புடையா னெந்நாளும் பயமொழித்திப் பார்நீத்தா னாயின் மன்னோ. (3)

மூகை யொருவன் தான்கண்ட கனவை யுரைக்கு மாறடியேன்
முதிர்ந்த கல்வி நிறையொழுக்க மமைவு பத்தி மெய்ஞ்ஞானம்
ஈகை முதலா மருங்குணங்க ளிறையு மில்லேன் சூதமமர்
ஈசர் திருத்தாட் கன்புந்த இயம்புங் கவியை நின்றுணையோ
டோகை பெருக வுலகறியச் செய்வா னெண்ணிச் செம்மாந்தேன்
உன்போற் றமிழின் இனிமையறி யுரவோர் சிலரே யாதலினால்
தோகை வரைமா னிடத்தருள் இருந்த படியீ தென்னமனம்
துன்புற் றயர்ந்து நைவதன்றித் தொழில்வே றுண்டோ தமியனுக்கே.

மாசமரி லெய்தான் மணமாலை கொள்ளானென்
றாசுகவி யின்றோன் றறைந்துளேன் — காசினியில்
அன்புடையா ரெல்லாந் தமக்குரியர் அத்தகைய
இன்புடைமை நின்னிடங்கண் டேன். (5)

தேன்கொண்ட மொழிச்சுவையும் தெவ்வடக்கும் பெரும்பொறையும்
ஊன்கொண்ட வுயிர்ப்பகையா யுள்ளமலப் பற்றறுக்கும்
மீன்கொண்ட கண்ணியர்பால் விழைவறுநின் மேதகவும்
கான்கொண்ட குழலுமையாள் காதலற்குச் சீரியதே. (6)

அந்நாளிலிருந்தமிழின் றுறையனைத்தும்படர்ந்துணர்ந்தவறிவின்மேலோன்
பன்னுகப் பணியணிந்த பரமனையே பாடிநிதம் பரவுந் தூயோன்
உன்னுதே தமிழ்நாட்டின் வறுமையினை யுற்றுன்சா மீப்பி யத்தைப்
பொன்னாட்டுப்புலவருமேயருந்தமுதமப்புலவோன்தமிழ்க்கொவ்வாதே. (7)

மீனாட்சி சுந்தரப்பேர்க் கவிஞனிவ்வா றகன்றதற்பின் விண்ணோர் போற்ற
வானாட்சிக் கேதகுதி யுடையதவ மாண்புடையோன் வஞ்ச மில்லான்
தேனாட்சி பெறுமினிய தீம்பாவை யாயிரமாச் செப்பு நாவான்
மானாட்சி கொண்டமதுரைச்சொக்கர் மலரடியை மருவி னானல். (8)

புரசைநக ரியற்றியபுண் ணியத்துதித்த சபாபதிப்பேர்க் கவிஞன் போகக்
கரிசகலச் சிவயோக ஞானியர்பா லன்பமைத்தோன் கல்வி தேர்ச்சி
அரியபொறை யின்புடைமை யன்னைபா லருத்திமிக வுடையோ னன்ற
பொருளமைதிபொன்போலப்பொதிந்துவக்கும்புலமையனும்போனனந்தோ.

திரிசிராப் பளித்தியாக ராசனுயர் சிவலோகம் அடைந்த வன்றே
அரசிலா நாடாய தருந்தமிழ்நா டாயினுநின் அருமை கண்ட
உரிசையெனதகத்துயரையொருவண்ணம்போக்கியதாற்கதிர்வேலென்னும்
பரிசுதுயர் மாற்றுவதற் கன்றிமற்றைப் பான்மையினுக் காகு மன்றே! (10)

தமிழினிமை யறிந்தவரும் பாவலர்களுடல்வெறுத்துச் சனனந் தீர்த்துப்
பமரமுரல் குழலுமையாள் பாகனரு குறச்செல்லும் பான்மை நன்றே
தமரவார் கவிசூழ்த் தாலத்துத் தமிழ்வளர்ப்பார் யார்தா மென்றே
அமையுமொரு நினைவொன்றே யனவரத மெனையல்லற் படுத்து மாதோ. ()

ஐயா!நீ யிறந்ததுவும் நன்றேகாண் அரன்பதமே தஞ்ச மென்ன
மெய்யாகும் பத்தியுடன் வெகுகாலம் பணிபுரிந்து விண்ணோர் போற்றும்
மையாருங் கண்டரருள் பெற்றநினக் கென்குறையிவ் வைய கத்தே
பொய்யாரும் என்னெஞ்சத்தார்க் கேவைத்தாய் புகலரிய துயரம் மன்னே.(12)

கதிர்வே லென்னும் பெயரவனே காப்பா னெனையென் றிருந்தேனும்
பதியாம் ஈசன் றன்னருளை யிழந்த பாவம் என்னேயோ!
மதியா திருந்தேன் மாற்றலரை யிதுகாறுற்ற லுடையேனென்
றதிகாரத்தை யிழந்தேனின் றன்பன் சரம கவியறைந்தே (13)

மரம்படுதீங்கனி

———:(o):———

[திருவாளர். பண்டித S. அருளம்பலம் அவர்கள்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி, காவி.]

சங்க இலக்கியங்களாக நமக்கு இப்பொழுது கிடைப்பனவற்றுள்ளே மிகப் பழமைவாய்ந்தன எட்டுத்தொகைநூல்களாகும். அத்தொகைநூல்களுள் ஒன்று **பதிற்றுப்பத்து** என்பது. பத்துப் பத்து அகவற்பாக்களைக்கொண்ட பத்துப் பகுதிகளையுடைமையால் இந்நூல் பதிற்றுப்பத்து எனப் பெயர்பெறுவதாயிற்று. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு புலவரால் ஒவ்வொரு சேரவரசன் மீது பாடப்பட்டனவாகும். ஒவ்வொரு செய்யுளுக்கும் அவ்வச் செய்யுளில் அமைந்த சிறந்த தொடர் பெயராக அமைந்துள்ளது. ஆறும்பத்து **ஆடுகோட்பாட்டுச்சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார்** பாடியது. இப்பத்தின் இறுதிச்செய்யுளுக்கு **மரம் படுதீங்கனி** என்னுந் தொடர் பெயராக அமைந்துள்ளது. 'அரம் போழ்கல்லா மரம்படு தீங்கனி' என்ற சிறப்பானும் 'மிஞிறுபுறமூசவுந் தீஞ்சுவைதிரியாது' என முன்னும், 'அஞ்சேறமைந்த முண்டை விளைபழம்' எனப் பின்னும் வந்த அடைச்சிறப்பானும் இத்தொடர் இச்செய்யுளுக்குப் பெயராகவமைந்தது. இத்தீங்கனியைக் குறிக்கும் பாட்டின்பகுதி வருமாறு:—

''மிஞிறுபுற மூசவுந் தீஞ்சுவை திரியா
தரம்போழ் கல்லா மரம்படு தீங்கனி
அஞ்சே றமைந்த முண்டை விளைபழம்'' (பதிற்.60-4-6)

இங்கே தீங்கனியின் தன்மைகள் கூறப்பட்டனவேயன்றிக் கனியின்பெயர் கூறப்பட்டிலது. தீங்கனி எது? என்பது அதன் தன்மைகளை ஆராய்தலினால் அறியலாகும். இச்செய்யுட்பகுதிக்கு

எழுதப்பட்ட பழையவுரை, "பிறிறு புறமூசவுந் தீஞ்சுவை திரி யாமை அப்பழத்தின் புறத்துவன்மையால்; அரம்போழ்கல்லா வென்றது புறத்துவன்மையால் அரிவாளும் போழமாட்டாவென்ற வாறு. அரம்போழ்கல்லா மரம்படுதீங்கனியென்றது புறக்காழன வாகிய பனை முதலியவற்றின் தீங்கனியை நீக்குதற்கு. இச்சிறப் பானும் முன்னும் பின்னும் வந்த அடைச்சிறப்பானும் இதற்கு 'மரம்படுதீங்கனி' என்று பெயராயிற்று. முண்டைவிளைபழம்— முட்டைகள்போலும் விளைபழம். முட்டையென்றது மெலிந்தது. மரம்படுதீங்கனியாகிய முட்டைவிளைபழம் என இருபெயரொட்டு" என்பது.

இவ்வுரையகத்தும் தீங்கனி எது என்பது கூறப்படவில்லை. இவ்வடிகளுக்கு, 'வண்டுகள் நறுமணத்தால் புறத்தே மொய்க்கவும் தம் இனிய சுவை மாறுபடாமல் புறத்துவன்மையால் அரிவாளும் பிளத்தற்கு இயலாத மரங்களில் விளைந்த இனிய பழங்களாகிய அழகிய சாறுநிரம்பிய முட்டைபோல முதிர்ந்தபழங்கள்; முட்டை இங்கே பலாப்பழத்தின்வடிவிற்கு உவமை' என்று பொருளுரைப் பாரும் உளர்.

மரம்படு தீங்கனி யென்றதனால் அகத்துக் காழுடைய மரத் தின்கனியே ஈண்டுக் கூறப்பட்டதென்பதும், பனையும் தெங்கும் கமுகும் முதலாகிய புறத்துக் காழுடையனவற்றின் கனியன்று என்பதும் தெளிவாகும். அகக்காழுடையனவற்றிற்கே மரம் என்னும் பெயர் வழங்கப்படுதல்,

> "புறக்காழனவே புல்லென மொழிப
> அகக்காழனவே மரமென மொழிப" (மரபு. 85)

என்னும் தொல்காப்பியத்தினல் அறியப்படும். மரம்படு தீங்கனி, பிறிறுபுறமூசவுந் தீஞ்சுவை திரியாமை முதலான தன்மைகளை யுடையதாகும்.

மரம்படுதீங்கனியாகிய விளைபழம் எனக் கொள்க. விளைபழம் என்றது நன்ருக முற்றின பழத்தை. விளைதல் - முற்றுதல்; "விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக்கு" என்புழி, 'விளைதயிர் - முற்றிய தயிர்' என நச்சினர்க்கினியர் பொருளுரைத்தவாறு காண்க (மலைபடு. 109). 'மிஞிறுபுறமூசவுந் தீஞ்சுவைதிரியாது' எனக் கூறப்பட்ட அடையினுல், அம் மரம்படுதீங்கனியானது மிஞிறுகள் புறத்தே மூசும்படியான மணமும் தீஞ்சுவையும் உடையதென்று கருதப் படும். 'மிஞிறு புறமூசவுந் தீஞ்சுவைதிரியாமை அப்பழத்தின் புறத்துவன்மையால்' என்று பழையவுரையாசிரியர் கூறுவதனுல், புறத்து மூசிய மிஞிறுகள் கனியை நுகர்தற்கு இயலாப் புறத்து வன்மையுடையது அம் முதிர்ந்தபழம் என்பது புலனுகும். அரம் போழ்கல்லாத் திங்கனி என்றதும் அப்பழத்தின் புறத்துவன்மை பற்றியேயாம். 'அரம்போழ்கல்லா' என்னுந் தொடர் கனியினுக்கே அடையாகக்கூறப்பட்டது என்பது, 'மிஞிறுபுறமூசவுந் தீஞ்சுவை திரியாமை அப் பழத்தின் புறத்துவன்மையால்' எனக் கூறி, 'அரம் போழ்கல்லா வென்றது புறத்துவன்மையால் அரிவாளும் போழ மாட்டா என்றவாறு' என மேலும் பழத்தின் புறத்துவன்மையைப் பழையவுரையாசிரியர் எடுத்துக்கூறுவதனுல் தெளியப்படும். அதனுல் ஈண்டுக் கூறப்பட்ட மரம்படுதீங்கனி முற்றிப் பழுத்த நிலைமையிலும் அரிவாளாற் போழப்படமாட்டாத புறத்துவன்மை யுடையதென்பது பெறப்படும்.

பலாப்பழங்களைக் குரங்குகள் கையாற்ருேண்டுதலும், தோண்டலாற் புண்பட்ட வாய்களிலிருந்து தேனூறுதலும் இயல்பு. இதனை,

"கலைத்தொடு பெரும்பழம் புண்கூர்ந்தூறலின்" (மலைபடு. 292)

"கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்" (குறுந். 342)

"கடும்பல்லூகக் கறைவிரலேற்றை
புடைத்தொடு புடைஇப் பூநாறு பலவுக்கனி" (குறுந். 373)

"கலையுணக் கிழித்த முழவுமருள் பெரும்பழம்" (புறம். 236)

என வருஞ் செய்யுட்பகுதிகளானும் அறியலாகும். குரங்கினால் தோண்டப்படுதலின்றித் தானே வெடித்துப்போதலும், அங்ஙனம் வெடித்த வாய்களிலிருந்து தேன் ஒழுகுதலும் பலாப்பழத்தின் இயல்பு என்பதனை,

"புண்ணரிந் தரலையுக்கன நெடுந்தா ளாசினி"

என்பதனாலும், 'நெடிய அடியையுடைய ஆசினிப்பலாப் புண்ணும்படி வெடித்து உள்ளுள்ள விதைகள் சிந்தின' என்னும் அப்பகுதியுரையானும் (மலைபடு.138—9), "பலாஅம் பழுத்த பசும்புண்ணரியல்" என்பதனாலும், 'பலாஅம் பழுத்த—பலாப்பழுத்த என்னும் பகரவொற்று மெலிந்தது. பசும்புண்ணென்றது புண்பட்ட வாய்போகப் பழுத்துவிழுந்த பழத்தினை. அரியலென்றது அப்பழத்தினின்றும் பிரிந்து அரித்துவிழுகின்ற தேனை' என்னும் அப்பகுதியுரையானும் (பதிற். 61—1),

"பலவின், நெகிழ்ந்துகு நறும்பழம்" (குறிஞ்சிப். 189—90)
"அள்ளிலைப் பலவி னளிந்துவீழ் சுளையும்" (சீவக. 2109)
"கிளர்சினைப் பலவின் பழங்கனிந்துவீழ்தேறலும்" (நைடத. நாட்டுப். 9)

என்னும் செய்யுட்பகுதிகளாலும் அறியலாகும். குரங்கு தன் கையாற் றோண்டும்படியாகவும் தானே வெடிக்கும்படியாகவும் மென்புறத்தையுடைய பலாப்பழத்தை, அரிவாளும் போழமாட்டாப் புறத்துவன்மையுடைய கனி என்றல் பொருந்தாமையின், அரம்போழ்கல்லா மரம்படுதீங்கனி பலாப்பழத்தின் வேறு என்பது புலனாகும். அரம்போழ்கல்லா என்றது மரத்தினுக்கே கூறப்பட்ட அடையெனில், அங்ஙனம் சிறப்பித்துக்கூறுதற்கேற்ற மிக்க வயிரம் பலாவினுக்கின்மையின் அங்ஙனம் கொள்ளல் பொருந்தாதென்க.

"கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா"

என்னும் தனிப்பாடற்றிரட்டுச்செய்யுளிற் பலா வாளாற் குறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருத்தல் கண்டுணரற்பாலது.

இனி, சங்கச்செய்யுள் முதலாகிய பழந்தமிழ்ச் செய்யுட்களிற் பலாப்பழத்தைக் கூறுமிடங்களில், சுளை தேறல் என்பவற்றையும் உடன்கூறிச்செல்வதைக் காணலாம்.

"கொழுஞ்சுளைப் பலவின்" (நற். 326—1)
"கமழ்சுளைப் பெரும்பழம்" (குறுந். 342—1)
"சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்" (அகம். 2—3—4)
"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்" (ஐந். எழுபது 4.)
"வார்சுளைப் பைம்புறப்பலவிற்று" (சீவக. 869.)
"செஞ்சுளைப் பலவின்" (சிலப். 10—75)
"பலவின்சுளைப் பைந்தேனொடும்" (திருக்கோவை. 99)

என வருவன காண்க. "பலவீன்றன முள்ளுடையள்ளமிர்து" (சீவக. 1191) "முருகவிழ் சுளையவாய் விண்ட முட்புறக்கனி" (நைடத. நாட்டுப். 20) எனச்சிறுபான்மை முள்ளும் எடுத்துக்கூறப் படும்.

தீங்கனியின் தன்மைகளைக்கூறிய ஆசிரியர், பலாக்கனியின் சிறந்த பகுதிகளாகிய சுளை முதலானவற்றுள் ஒன்றையாவது கூறிற்றிலர். சுளையையும் தேறலையுமே 'அஞ்சேறு' எனக் கூறினார் எனின் அவை சேறு என்னும் சொல்லாற் செய்யுட்களிலாவது உரைகளிலாவது பயின்றுவாராமையின் அங்ஙனமுரைத்தல் பொருந்தாதென்க. 'சேறு' என்னுஞ் சொல் 'இனிமை' (நெடுநல். 26), 'கனி' (மதுரைக். 400), 'சாறு' (மலைபடு. 137), 'செறிந்த நீர்' (சிறுபாண். 28), 'பாகு' (மதுரைக். 627) முதலான பொருள்களில் ஆன்றோரால் வழங்கப்பட்டுள்ளது. சேறு என்பது பழங்களையடுத்துவரும்போது பெரும்பான்மையும் இனிமை, சாறு, தேன் என்ற பொருள்களில் வரும். "நறுவடிமாவின் வடிசேறு விளைந்த தீம்பழத்தாரம்" என்புழி (மலைபடு. 512—3) 'வடிசேறு—பிழியப் படுஞ் சாறு' என்றும், "சேறும் நாற்றமும் பலவின் சுளையும்" என்புழி, 'சேறு—தேன்; சேறென்றார் சுளையிலிருக்கின்றதேனை' என்றும் நச்சினார்க்கினியர் பொருளுரைத்தவாறு காண்க. சேறு பலாவினையடுத்துவரும்போது அதற்குப் பொருளாகவுரைத்த 'தேன்'

என்னும் பொருளேயே ஈண்டும் பொருளாகக்கொண்டு 'அஞ்சேறமைந்த விளேபழம்—சுளேயில் அழகிய தேன்பொருந்திய முற்றிய பலாப்பழம்' என்று பொருளுரைத்தல் அமையும். ஆயின், தேன் பொருந்திய முதிர்ந்த பலாப்பழம் அரம் போழ்கல்லா மரம்படு தீங்கனி என்று சிறப்பித்துக் கூறுதற்கேற்ற புறத்துவன்மை யுடையதன்றாதலின் அஞ்சேறு என்பதற்கு அப்பொருளமையாது என்பது பெறப்படும்.

இனி, மற்றைப் பழங்களிலும் பெரிதாகிய பலாப்பழத்தைப் 'பெரும்பழம்' என்று புலவர்கள் சிறப்பித்துக்கூறியுள்ளார்கள்.

"கமழ்சுளேப் பெரும்பழம்" (குறுந். 342—1)
"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
... ...
சிறுகோட்டுப் பெரும்பழம்" (குறுந். 18—1—4)
"கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளேப் பெரும்பழம்" (நற்.213–2–3)
"திண்ணிலேப் பலவின் றேங்கொள் பெரும் பழம்"(சீவக். 2724)

என நூல்களிற் பயின்றுவருவன காண்க. பலாப்பழத்திற்குக் குடம் முழவு என்பனவற்றை உவமையாகக்கூறுவர்.

"முடமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்" (நற். 353)·
"முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்" (அகம். 351)
"சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினேப் பலவே"(மலேபடு.143-4)
"கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்" (மலேபடு. 511)
"மூன்றி னீடிய முழவுறழ் பலவின்" (அகம். 172—11)
"முழவுமருள் பெரும்பழம்" (புறம். 236—1)
"முழவினமைந்த பெரும்பழம்" (பதிற். 81)
"காய்த்துணர் முழவண பலவின் றீங்கனி" (சீவக. 825)

என வருவனற்றை நோக்குக. முண்டை விளேபழம் என ஈண்டுத் தீங்கனிக்கு முட்டை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. குடம் முழவுபோன்ற பருமனுவது பலாப்பழம்போன்ற நிறம் முதலிய

தன்மைகளாவது முட்டைக்கின்மையின், முட்டைபோலும் பழம் பலாப்பழத்தின் வேறானதென்க.

அரத்திறாற் போழப்படமாட்டாமை முதலான கனியின் இயல்புகளை நோக்கும்போது மாம்படுதீங்கனியாகிய விளைபழம் விளாம்பழம் என்பது புலனாகும். அது முட்டையை உவமைகூறு தற்கேற்ற பருமனும் வடிவும் நிறமும் முதலாகிய தன்மைகளை யுடையது. விளைபழமாயிருக்கும்போது அழகிய சேறுபோன்ற கனியையுடையது. நன்றாக முற்றிப் பழுத்தகாலத்தும் விளாம் பழம் அரிவாளாற் போழப்படாத புறத்துவன்மையுடைத்தாதல் அறிக. வண்டுகள் மொய்க்கும்படியான மணமும் இதற்குண்டு. "விளாம்பழங்கமழும் கமஞ்சூற் குழிசி" என நற்றிணையில் (12—1) வருதலும் காண்க. "அஞ்சேறமைந்த முண்டை விளைபழம் ஆறு செல் மாக்கட் கோய்தகை தடுக்கும்" என்று செய்யுட்பொருள் மேலே தொடர்ந்துசெல்வதனால் வழிப்போவார் அக்கனியை உண்டுசெல்லல் அறியப்படும். இவ்வழக்கம்,

"பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்
டுடும்படைந் தன்ன நெடும்பொரி விளவி
ளுட்டொழி பந்திற் கோட்டுமூக் கிறுபு
கம்பலத் தன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்றுநாட் டாரிடைச்
சேறு நாமெனச் சொல்ல"

என்னும் நற்றிணைச் செய்யுளினும் கூறப்படுதலின் மாம்படு தீங்கனி விளாம்பழமே என்பது தெளிவாகும். ஈண்டு விளாம்பழத்தினுக் குப் பந்தினை உவமையாகக் கூறியிருத்தல் சிந்திக்கத்தக்கது.

இதுகாறுங்கூறியவற்றால் பதிற்றுப்பத்தில் மாம்படுதீங்கனி எனக் கூறப்பட்டது விளாம்பழம் என்பது தெளிவாகும்.

சேரமான்பெருமாள்நாயனார் அருளிச்செய்த

பொன்வண்ணத்தந்தாதி

மூலமும் உரையும்.

உரையாசிரியர்: திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளையவர்கள்

1 பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றந்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே.

பதவுரை:— *தன்னைக்கண்ட - இறைவனைக்கண்ட, என்வண்ணம் எவ்வண்ணம் - என்னொளி என்ன தன்மை, அவ்வண்ணமாகிய ஈசனுக்கு - அன்ன தன்மையனாகிய சிவனுக்கு, பொன்வண்ணம் எவ்வண்ணம் - பொன்னின் தன்மை எதுதன்மை, அவ்வண்ணம் மேனி - அந்தன்மை திருமேனி, பொலிந்து இலங்கும் - மிகவும் விளங்கும், மின்வண்ணம் எவ்வண்ணம் - மின்னொளி எத்தன்மை, அவ்வண்ணம் வீழ் சடை - அத்தன்மை தாழ்சடை, வெள்ளிக் குன்றம் தன் வண்ணம் எவ்வண்ணம் - வெள்ளிமால்வரையின் ஒளியெத் தன்மை, அவ்வண்ணம் மால் விடை - அத்தன்மையாகிய மால்விடை என்றவாறு.*

குறிப்புரை:— பொன்வண்ணம் மேனி, மின்வண்ணம் வீழ்சடை, வெள்ளிக்குன்றம் தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை ஈசனுக்கு ஆம் என்று இயைக்க. பொன்வண்ணம் இறைவனுக்கு மேனியாதலின், அதனைக் கூறுவார்போன்று மங்கலமொழியும் உடன்கூறினார். அதனைப் 'பொன்னார்மேனியனே' என்ற தேவாரத்தாலும் உணர்க. மால் விடை-இருபெயரொட்டுப் பண்புத்தொகை; மாலாகிய விடை: என்றதனைத் "தடமதில்களவைமூன்றுந் தழலெரித்த வந்நாளில், இடபமதாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ" என்னும் திருவாசகத்தானும் உணர்க. இனிப் பெரிய விடையெனினும் அமையும். விடை - வடமொழிச்சிதைவு. உயிர்கள் பசுத்துவம் நீங்கியவழிப் பதிகரணம்பெறுதல் ஒருதலையாதலின் "தன்னைக் கண்ட என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசனுக்கே" என்றார்.

"தன்னைக்கண்ட" என்றது இறைவனைக்கண்ட என்றவாறு. அது அவனை அனுபூதியிற் கண்டலை. என்வண்ணமென்றது ஆன்மப்பிரகாசத்தை.

2 ஈசனைக் காணப் பலிகொடு செல்லவெற் றேயிவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ லாமென்று பேதையர்முன்
தாயெனை யீர்ப்பத் தமியேன் தளரவத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லவென் றனிமை விண்டன வாட்கண்களே.

பதவுரை:— ஈசனைக் காண - இறைவனைக் கண்டு, பலிகொடு செல்ல - பிச்சையைக் கையிற்கொண்டுபோக, இவள் எற்றே-இவள் எத்தன்மையளே! ஓர் பேயனைக் காமுறு பிச்சிகொலாம்! என்று-ஒரு பேய்த்தன்மையுடையானை விரும்பும் பிச்சியேயாமென்று, பேதையர்முன் - மாதர்முன்னே, தாய் எனை ஈர்ப்ப - நற்றாய் என்னை இழுப்ப, தமியேன் தளர - யான் தளர்ச்சியடைய, அத் தாழ்சடையோன் வா எனைப் புல்ல என்றான் - அத் தாழ்ந்த சடையையுடைய இறைவன் என்னையடைய வாவென்றழைத்தனன், வாட்கண்கள் இமைவிண்டன-இவ்வாறு நிகழ வாட்படைபோலும் கண்கள் இமைதிறந்தன.

குறிப்புரை:—இமைவிண்டனவாட்கண்கள் என்றமையான் இத்துணையும் கனவில் நிகழ்ந்தமை காண்க. இது கனவின் நிலையுரைத்தல். 'வாட்கண்கள்' என்பதற்கு வேறுரைப்பாரும் உளர். ஆம் கட்டுரைச்சுவைப்பொருட்டு. காண - செய்தென்னும் எச்சத்திரிபு. இமைவிண்டன ஒருசொல். இதற்கு விழித்துக்கொண்டன என்பது பொருள்.

3 கண்களங் கஞ்செய்யக் கைவளை சோரக் கலையுஞ்செல்ல
ஒண்களங் கண்ணுதல் வேர்ப்பவொண் கொன்றையந் தாருருவப்
பெண்களங் கம்மிவள் பேதுறு மென்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்மிசை பாடநின் றடும் பரமனையே.

பதவுரை:—கண்கள் அங்கு அம் செய்ய - கண்கள் நீரை அங்குப் பொழிய, கைவளை சோர-கையினின்றும் வளையல்கள் கழல, கலையும் செல்ல-ஆடையும் நெகிழ்ந்துவிழ. ஒண்களம் நுதல் கண் வேர்ப்ப - ஒள்ளிய கண்டத்தினும் நெற்றியினும் வெயர்வை அரும்ப, ஒண் கொன்றை அம் தார் உருவப் பெண் இவள் - ஒள்ளிய கொன்றையாகிய அழகிய மாலைபோலும் உருவத்தையுடைய பெண் இவள், ஓர் பேதைநெஞ்சம் பண்கள் அங்கம் இசை பாட நின்று ஆடும் பரமனை- ஒரு பேதைத்தன்மையுடையாள் நெஞ்சிற் பண்களின் அங்கமாகிய இசைபாட நின்று ஆடுகின்ற பரமனை, பேதுறுமென்பது களங்கம் - மயக்குவளென்பது குற்றமாம்.

குறிப்புரை:—இது பாங்கிகூற்று; விரகவேதனையிற் கண்ணீர் அரும்பலும், கைவளை கழறலும், கலைசோரலும், கண்டத்தும் நுதலிலும் வெயர்வை அரும்புதலும் கூறுதலுண்மையான். இத்தலைவியைக் கொன்றைமாலையாக உருவகஞ்செய்தார், "திருவளர் தாமரை சீர்திகழ் காவிக ளீசர்தில்லைக் குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ மருவளர்மாலை" எனப் பிறருங்கூறலான். பேதையென்பது பருவத்தைநோக்கியதன்று, பெண்ணென்னுந் துணையாய்நின்றது.

4 பரமனை யேபலி தேர்ந்துநஞ் சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரங் கொண்டுங் கொடுப்பது பேரருளாஞ்
சரமனை யேயுடம் பட்டு முடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாதுமுக் கண்ணுடை மாதவனே.

பதவுரை:—வரம் அனையே கிளையாகும் - சிறந்த தாயையே வேயாகக் கொண்டுநின்ற, முக்கண்ணுடைமாதவன் - முக்கண்கொண்டமாதொருபாகத்தான், பரமனையே பலிதேர்ந்து நஞ்சுண்டது - பிறர்வீடுகள்தோறுஞ் சென்று இரந்து நஞ்சினை உண்டது, பன்மலர்சேர் பிரமனையே சிரங்கொண்டுங் கொடுப்பது பேரருளாம் - சிறப்பித்துரைக்கப்பட்ட தாமரை மலரில் தங்கிய நான்முகனையே தலையைக் கொய்தும், யார்க்குங்கொடுப்பது பெருங்கருணையாம்; சரமனையே உடம்பட்டும் உடம்பொடு மாதிடமாம் - ஐங்கணைக்கு உரியவனாகிய மன்மதனை, உடம்பழித்தும், இடப்பாகம் உமையோடுமாம்.

குறிப்புரை:—முக்கண்ணுடை மாதவனென்பதற்கு முக்கண்கொண்டமாயோனாகிய வடிவமாயமர்ந்தான் எனினும் ஆம். இவ்வாறே இவ்வாசிரியர் 'முக்கண்மாயனை' எனப் பிறண்டுங் கூறுதல் காண்க. "பூவினுக்கருங்கலம்" ஆதலின் பன்மலர் என்றதென்க. இது கோபமும் பிரசாதமுடன் கூறப்பட்டது. உடம்பை வருத்துவதாகாது, உயிரைவருத்துவதாகலின் மன்மதனைச் சரமன் என்றார். முக்கண்ணுடைமையை "இமையாதமுக்கண் மூவரிற்பெற்றவன்" என்றதனானும் உணர்க.

5 தவனே யுலகுக்குத் தானே முதறன் படைத்தவெல்லாஞ்
சிவனே முழுதுமென் பார்சிவ லோகம் பெறுவர்செய்ய
அவனே யடல்விடை யூர்தி கடலிடை நஞ்சமுண்ட
பவனே யெனச்சொல்லு வாரும் பெறுவரிப் பாரிடமே.

பதவுரை:—தவனே உலகுக்குத் தானே முதல் - தவமாவான் உலகுக்குத் தானே முதல்வனுவான், தான்படைத்த எல்லாம் - தான்படைத்தனவாகிய எல்லாப்பொருளும், சிவனே முழுதும் என்பார் - எல்லாம் சிவமாகத் தியானிப்பார், சிவலோகம் பெறுவர் - சிவலோகத்தையடைவர், செய்ய அவனே அடல்விடையூர்தி கடலிடை நஞ்சமுண்ட பவனே - செம்மையாகிய மேனியையுடையானே! வெற்றிபெற்ற இடபத்தை வாகனமாகக் கொண்டவனே! கடலிற்றேன்றிய விடமுண்ட பவனென்பதோர் பெயருடையானே!, எனச் சொல்லுவாரும் இப்பாரிடம் பெறுவர் - என்று சொல்லி வழுத்துவாரும் இந்நிலவுலகம் பெறுவர்.

குறிப்புரை:—இதனுல் முறையே இறைவனைத் தியானிப்பாரும் வழுத்துவாரும் அடையும் பயன் கூறப்பட்டது. கடலிற்பிறந்த விடத்தைக் கண்டாங்கு வெருவிய அமரர்போலன்றி அதனையுண்ட சதுரப்பாட்டினை நோக்கிக் "கடலிடை நஞ்சமுண்டபவன்" என்றதென்க. இதனை, "நஞ்சமுண்டு சாவா மூவாச் சிங்கமே" எனப் பெரியாரும் கூறுதல் காண்க. பவனென்றது எல்லாவற்றையும் பிறப்பிப்பவன் எனும் பொருள்படும். விடத்தையும் அவனே உண்டாக்கினவனுதலால் அஃது அவனுக்கு யாதும் ஊறு புரிந்திலது; அமுதமாயிற்று.

6 இடமால் வலந்தா னிடப்பா றுழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா லிடந்துகி றேல்வல மாழி யிடம்வலமான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமா லிடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே.

பதவுரை:—எங்கள் கூத்தனுக்கு-எமது கூத்தப்பிரானுக்கு, இடம் மால் வலம் தான் - இடப்பாகத்து மாயவன், வலப்பாகத்துத் தான்; இடப்பால் துழாய் வலப்பால் ஒண் கொன்றை - இடப்பாகத்துத் துழாய்மலர், வலப்பாகத்து ஒள்ளிய கொன்றைமலர்; வடம் மாலிடம் துகில் தோல் வலம் - வடத்தில் துயில்கொள்ளும் மாலிடத்துப் பீதகஆடை, வலத்துத் தோலாடை; ஆழி இடம் வலம் மான்-ஆழி இடத்தது, மான் வலத்தது; இடம் மால் கரிது வலம் இவனுக்கு சேது - இடப்பாகத்துள்ள மாயவன் நிறம் கறுப்பு, வலத்திலுள்ள இவனுக்கு நிறம் சிவப்பு; மாலிடம் எழில் நலஞ்சேர் குடம் வலம் கொக்கரையாம் - மாலிடத்தது அழகிய நலமமைந்த குடக்கூத்து, வலம் கொக்கரைக்கூத்தாம்.

குறிப்புரை:—இஃது இறைவன் மாயவனைத் தனது இடப்பாகங்கொண்டதைக் கூறியதாம். இடம் மால், துழாய், துகில், ஆழி, கரிது, குடமெனவும், வலம் தான், கொன்றை, தோல், மான், சேது, கொக்கரை எனவும் ஒட்டுக. "தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ் சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்" எனப் பேயாழ்வாரும் இவ்வாறே கூறுதல் காண்க. "அரியலாற்றேவியில்லை ஐயனையாறனார்க்கே" எனச் சைவப்பெரியாரும் பணித்ததும் அது. குடம் என்றது மாயவன்கூத்தின்விசேடம். இதனை, "வாணன் பேரூர் மறுகிடை நடந்து - நீணில மளந்தோ னாடிய குடமும்" என்றதனானும் உணர்க. கொக்கரை - சிவன்கூத்தின்விகற்பம்; வேறு கூறுவாரும் உளர். வடமாலிடமென்றது ஆலிடைத் துயில்கொள்ளலை. வல மானென்றதற்கு வலத்தே விடைக்கொடியென்ப தொன்று.

7 கூத்துக்கோ லாமிவ ராடித் திரிவது கோல்வளைகள்
பாத்துக்கோ லாம்பலி தேர்வது மேனி பவளங்கோலா
மேத்துக்கோ லாமிவ ராதரிக் கின்ற திமையவர்தம்
ஓத்துக்கோ லாமிவர் க்ண்டதிண் டைச்சடை யுத்தமரே.

பதவுரை:—இண்டைச் சடை உத்தமர் - இண்டைமாலையை அணிந்த சடாபாரத்தையுடைய குணசீலராகிய, இவர் ஆடித்திரிவது கூத்து ஆம்- இவர் புரிவது கூத்தாகும், பலிதேர்வது - பிச்சையேற்பது, கோல்வளைகள் பாத்து ஆம் - அழகிய வளையல்களை யணிந்த மாதரிடும் உணவாம், மேனி பவளமாம் - சரீரம் பவளநிறமாம், இவர் ஆதரிக்கின்றது-இவர் விரும்புவது, இமையவர்தம் எத்து ஆம் - தேவராற் செய்யப்படுகின்ற துதிகளாம், இவர் கண்டது ஒத்து ஆம் - இவர் அருளிச்செய்தது வேதமாம்.

குறிப்புரை:—பவளமென்பது வடமொழிச்சிதைவு; பயணம் என்புழிப் போல. பாத்து - இந்நெறியில் அதிதிகட்கென வரைவுசெய்த உணவின் பங்கு. எத்து, கூத்து, ஒத்து வினைப்பெயர்கள். இண்டை - மாலையின் விசேஷம். மேனிபவளம்: 'செம்பவளவண்ணர்' எனப் பெரியாரும் பணித்ததும் அது. இமையவரென்றது மரபுவழுவமைதி. ஒத்தென்றது வேதத்தை; "முடிவில்லா ஓத்தானே பொருளானே" என்பது திருவாசகம். கொல் ஐக்தும் அசைநிலை. உத்தமன்: "உத்தமனத்தனுடையான்" என்பது மணிவாசகம்.

8 உத்தம ராயடி யாருல காளத் தமக்குரிய
மத்தம ராமதி மாடம் பதிநலஞ் சீர்மைகுன்றா
வெத்தம ராயும் பணிகொள்ள வல்ல விறைவர்வந்தென்
சித்தம ராயக லாதுட னாடித் திரிதவரே.

பதவுரை:—*உத்தமராய்-நற்குணமுடையவராய், அடியார் உலகு ஆள-அடியவர் உலகை ஆண்டுவர, தமக்குரிய - தமக்குரியன, மத்தம் - ஊமத்தை மலரும் அரா - பாம்பும், மதி - சந்திரனும், மாடு - விடையுமாம், அம் பதி - அழகிய பதியும், நலம் - நன்மையும், சீர்மை-சிறப்பும், குன்றா - குறை யாத, எத்தமராயும்- எவ்வெவரேனும், பணிகொள்ளவல்ல - அடிமைகொள்ள வல்ல, இறைவர் - முதல்வர், வந்து என் சித்தமராய் - என்மனதில் வந்து பொருந்தி, அகலாது - நீங்காது, உடன் - என்னுடன், ஆடி - விளையாடல் பயின்று, திரிதவர் - திரிந்தவராம்.*

குறிப்புரை:—*தம்மையடைந்தாருக்கு உலகையாளும் பெருந்திருவளிப்பி னும் தமக்குரியனவல்ல என்பார் "தமக்குரிய மத்தமராமதி மாடு" என்றார். உம்மை முற்று. சித்தமர் - சிந்தனையில் வீற்றிருப்பவர்; இதனை, 'மலர் மிசையேகினான்' என்றதனால் அறிக. எத்தமராயுமென்றது நாற்பாற்குலத் துத்தோன்றிய எவரேனும் என்றதனை. திரிதவர்: "தேவரென்றேயிறுமாந் தென்னபாவந் திரிதவரே" என்னும் திருவாசக அடியும் காண்க.*

9 திரிதவர் கண்ணுள்ளு முள்ளத்தி னுள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை யறிவிப்ப தாயினு மாழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர் சாந்தங்கண் மூன்றேடொன்றும்
பரிதவர் தாமே யருள்செய்து கொள்வர்தம் பல்பணியே.

பதவுரை:—*திரி தவர் கண்ணுள்ளும் - திரிகின்ற தவமுடையார் கண்ணி னும், உள்ளத்தினுள்ளும் - சிந்தையினும், திரிதரினும் - திரிந்தாலும், அவர் தன்மை - அவர் குணங்களை, அறிவிப்பது - தெரிவிப்பது, அரிது - அருமை யானது, ஆயினும் - ஆனாலும், அவர் கண்டம் - அவர் மிடறு, ஆழி நஞ்சேய் கரிது- கடலிற்பிறந்த விடம் பொருந்திக் கருநிறத்தது, அவர் சாந்தம்-அவர் பூச்சு, வெளிது - வெண்ணிறமுடையது, கண் மூன்றொடு ஒன்றும் - கண்கள் மூன்றினொடு பொருந்தியதாம், பரி தவர் - தாங்கிய வில்லையும், தம் பல்பணி-தம்முடைய பல அணிகளையும், தாமே அருள்செய்துகொள்வர் - தாமே அமைத்துக்கொள்ளுவர்.*

குறிப்புரை:- கண்ணினும் உள்ளத்தினும் இறைவன் வீற்றிருப்பான் என்றதைக் "காளத்தியானவனென் கண்ணுளான்", "ஏகம்பத்தானவனென் எண்ணத்தான்" என்னும் திருவாக்குகளான் உணர்க. நஞ்சேய்கரிதென்றுழி, ஏய் என்ற முதனிலைத் தனிவினைப்பெயர் செய்தென்னும் வினையெச்சப் பொருட்டு; வரிப்புனைபந்து என்புழிப்போல.

10 பணிபதம் பாடிசை யாடிசை யாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற்கோ ளப்பனை யத்தவற் கேயடிமை
துணிபதங் காமுறு தோலொடு நீறுட லார்த்துநல்ல
தணிபதங் காட்டிடுஞ் சஞ்சல நீயென் றனிநெஞ்சமே.

பதவுரை:—பதங்கன் பற்கொள் அப்பனை - சூரியனுடைய பல்லைத் தகர்த்த சிவபிரானை, பதம் பணி - அவருடைய சீபாதங்களை வணங்கு, இசை பாடு - அப்பிரானுருடைய புகழைப் பாடுவாயாக, இசையாக ஆடு - மூன்முறையாக ஆனந்தக்கூத்தாடு, பனிமலரால் அணி - அவருக்கு அன்புமலர்மாலையைச் சூட்டு, அத்தவற்கே அடிமை துணி - அச்சிவபிரானுக்கே தொண்டு செய்யத் துணியக்கடவாய், தோலொடு நீறு உடல் ஆர்த்துப் பதம் காமுறு - தோலுடைதரித்துத் திருநீறு பூசி அவருடைய சீபாதங்களைப் பற்றுவாயாக, நல்ல தணிபதங்காட்டிடும் - நல்ல சாந்தத்தைக் கொடுக்கும் முத்திநிலையைக் காட்டிவிடும், என் தனி நெஞ்சமே! சஞ்சலம் நீ - என்னுடைய ஒப்பற்ற மனமே! உன்னுடைய துயரத்தை ஒழித்துவிடுவாயாக.

குறிப்புரை:—துவட்டா என்னும் ஞாயிற்றைப் பற்றகர்த்தமையான் "பதங்கன் பற்கொளப்பன்" என்றார். இதனை, "சூரியனார் தொண்டைவாயினிற் பற்களை வாரிநெரித்தவா றுந்தீபற" என்னும் திருவாசகத்தால் அறிக. "இறுமாந்திருப்பன்கொலோ - ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச் சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென் றிருமாந்திருப்பன்கொலோ" என்பதே முத்திநிலை.

11 நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர் ததும்ப முகமலர
வஞ்செங் கரதலங் கூம்பவட் டாங்க மடிபணிந்து
தஞ்சோன் மலரா லணியவல் லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத் தான்பெரு வானகமே.

பதவுரை:-நெஞ்சம் தளிர்விட - மனம் தளிர்க்க, கண்ணீர் ததும்ப - ஆனந்தக்கண்ணீர் பெருக, முகம் மலர - முகம் மலர்ச்சியெய்த, அம் செங்கரதலம் கூம்ப - அழகிய செங்கை குவிய, அட்டாங்கம் அடிபணிந்து - எட்டு உறுப்பும்

நிலமுறப் பணிந்து, தம் சொன்மலரால் அணியவல்லோர்கட்கு - தம் சொல் மாலையால் வழிபடவல்லவர்கட்கு, தாழ்சடையான் - நீண்ட சடாதாரியாகிய சிவபிரான், வஞ்சம் கடிந்து - கள்ளமொழித்து, பெருவானகம் திருத்தி வைத்தான் - சிவலோகம் அமைத்துவைத்தனன்.

குறிப்புரை:—தளிர், நீர், மலர் எனச் சோலைவனப்பாற்கூறியவாறு. அட்டாங்கம் அடிபணிதல் என்றது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். சொன்மலர் என்றது பாடுந்தொண்டினை; "சொன்மாலை பயில்கின்ற வண்டினங்காள்" என்றார் பெரியாரும். வஞ்சம் கடிதலென்றது மலநீக்கத்தை. பெருவானகந்திருத்திவைத்தலென்றது திருவடிப்பேறளித்தலை. தளிர், கண்ணீர், மலர் எனத் தொனியாற் சொன்மலராலணியவல்லார்கட்கெனக் கூட்டுக.

12 வானக மாண்டுமந் தாகினி யாடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப் போருங் கனகவண்ணப்
பானிற நீற்றற் கடியரு மல்லாப் படிறருமே.

பதவுரை:—வானகம் ஆண்டு - தேவலோகத்தை அரிசுபுரிந்து, மந்தாகினி ஆடி - கங்கைநீராடி, நந்தாவனம் சூழ் - நந்தனவனத்திற் சூழ்ந்த, தேன் நக மாமலர் சூடிச் செல்வோரும் - தேன் சிறந்த பெரும் பூக்களைத் தூவிச் செல்வோரும், சிதவல் சுற்றி - கந்தையை உடுத்து, கால் நகம் தேயத் திரிந்து இரப்போரும் - காலினுள்ள நகம் தேய்ந்துபோகும்படி நடமாடிப் பிச்சையேற்பவரும், கனக வண்ணப் பால்நிற நீற்றற்கு - திருமேனியாகிய பொன்னிறத்தில் வெண்ணிறமாகிய நீறுபூனைந்த சிவபிரானுக்கு, அடியரும் அல்லாப் படிறரும் - தொண்டரும் அவரையொழிந்த பொய்ம்மையாளருமாம்.

குறிப்புரை:—தேனகமாமலர் என்பதற்கு, தேன் தன்னகத்துள்ள மாமலரெனினுமாம். ஆண்டு ஆடி சூடிச் செல்வார் அடியரும், சுற்றித் தேயத் திரிந்து இரப்போர் அல்லாப் படிறருமென வினைமுடிக்க. மந்தாகினி என்பது வான நதி; அது வானிடத்துப் பெருகியவழி எய்தியபெயர், பானிற நீறென்றது திருவெண்ணீற்றை. "பாற்றிரு நீற்றெம் பரமனை" என்பது திருவாசகம். இறைவனை வழிபடுவோரும் வழிபடாதவரும் எய்தும் பேறு இதனாற் கூறப்பட்டது. தேனகமாமலர், "தேனகமாமலர்க்கொன்றைபாடி" என்னும் திருவாசகத்தோடு ஒப்பிடத்தக்கது.